350

350

[illegible]

(C. N. A)

4 - 48

V2111,[illegible](X723)
N48

# ஜமீன் இனாம் ஒழிப்பு

C.N. அண்ணாதுரை, M.A.

திராவிடப் பண்ணை

தெப்பக்குளம் :: திருச்சி

முதற் பதிப்பு : 1948

பதிப்புரிமை

108783

விலை ரூ. 1 0 0

The Royal Printing Works, Mount Road, Madras.

# ஜமீன் இனம் ஒழிப்பு

நம் நாட்டில், கூலிக்கோ, வாரத்திற்கோ, பிறருடைய நிலத்தைப் பயிரிட்டு வயிறு கழுவுவோரே அதிகம். சொந்த நிலத்தில், தானே உழுதுஉண்டு வாழ்வோரின் தொகை மிக மிகச் சொற்பம்.

தானே பயிரிட்டு வரும் சொந்த நிலம், தாய்ப் பால் குடித்துவளரும் குழந்தைபோல. நமது நிலத்தை, கூலிக்கோ, வாரத்திற்கோ விட்டுப் பயிர் செய்வது, தாதியிடம் பால் கொடுக்கச் செய்தோ அல்லது தகர டப்பாவில் வரும் தயாரிப்புப் பால் கொடுத்தோ வளர்க்கப்படும் குழந்தை போலத்தான். வளராது என்று அர்த்தமில்லை; வளரும். ஆனால் அந்தப் பாலிலே வாஞ்சனை கலந்திருக்கமுடியாது—தாயின் அன்பு அதிலே கலந்திருக்க முடியாது— அதுபோலவே தான், கூலிக்கோ வாரத்திற்கோ பயிரிடும் நிலத்துக்கு, எவ்வளவு வளம் ஏற்பட்டபோதிலும், உடைமைக்காரனின் சொந்த உழைப்பும், பராமரிப்பும், கண்காணிப்பும் இல்லாமற் போனால், அந்த நிலம், இருபோகம் தரினும், சரியான வளம் பெற்றது என்று கூறமுடியாது. பாடுபடுபவன் ஒருவன், பட்டா உரிமை பெற்றவன் ஒருவன்; உழுது பயிரிட்டு அறுவடை செய்பவன் ஒருவன், அறுவடைக்குப் பிறகு அளந்து பார்த்து அக மகிழ்பவன் வேறொருவன்

என்று இருந்தால், சங்கடமே விளையும். தாதி பாலூட்டி வாய் துடைத்துவிட்டுக் குழந்தையைத் தாயிடம் தர, குழந்தை எக்காரணத்தாலோ அழ, தாய், தாதி சரியாகப் பால்தரவில்லையோ என்று சந்தேகித்து, "ஏனடி சனியனே! மாதம் பத்து ரூபாய் மூள்ளங்கிபத்தை போலமட்டும் பெற்றுக் கொள்கிறாயே! குழந்தைக்கு வயறு நிரம்பக்கூடப் பால் தரக்கூடாதோ! அழுகிறதே, என் கண்மணி" என்று தாதியைக் கண்டிக்க, அவள் தாயின் தலை மறைந்த பிறகு, "சனியன் அது. காலை எட்டு மணிக்குப் பால் கொடுக்க ஆரம்பித்தேன், பத்து மணி வரைக்கும் பாடுபடுத்திவிட்டுக் கத்துகிறது. அவள் கூச்சலிடுகிறாள். அப்பா! போதும் தெரியாமல் இந்தச் சனியனிடம் வந்து சிக்கிவிட்டேன்' என்று கூறிச் சோகிக்கிறாள்.

எவ்வளவு பாடுபட்டு, சத்யத்துக்குப் பொதுவா உழைச்சி என்ன சுகம் இருக்கு பொன்னு! உள்ளங்கை அளவு நிலமானாலும், சொந்தமாக இருக்கணும், சுகம் உண்டு. ஊரான் நிலத்துக்கு நாம்ப எவ்வளவு உண்மையாகப் பாடுபட்டாலும், அவனுக்குத் திருப்தி உண்டா? கிடையாது. என்னமோ, இவக அப்பன் பாட்டன் காலத்திலே இருந்து பயிர்த்தொழில் செய்தவன் போல, என்னைக் கேள்வி கேட்கிறான்: 'சேடையிலே ஏன் விதைச்சே! சேத்தை ஏன் கலக்கினே? மடை ஏன் இப்படி ஆச்சி? மாடு ஏன் நொண்டுது? வரப்பு ஏன் சரியு'துன்னு கேள்விமேலே கேள்வி போட்டு, நாம்ப என்ன பதில் சொல்கிறோம் என்



பதைக் காதிலேயும் வாங்காமே. சோம்பேறி! மோசக்காரன்! அக்கறை இல்லாதவன்! என்றெல்லாம், ஏசிவிட்டுப் போகிறான். நமக்கு ஏம்பா, இந்தப் புழைப்புன்னு தோணுது. மானம் கருத்தா, மழை வரும் மழை வருமனு மாரியை நம்ப வேண்டிக் கொள்றது, இவரு மதராசிலே இருப்பாரு மகராஜனுக்கூடக் கூடிக்கிட்டு குஷாலா! வாய்க்கா வெட்டி, தண்ணிப்பாச்சி, காவல் காத்து, களை பறிச்சி, எல்லாத்தையும் ஒழுங்கா செய்து வைத்தா, ஒய்யாரம் பேசறாரு ஒவ்வொரு நாளைக்கு வந்து. நீ சொல்றதுதாம்பா சரி. என்னமோ, ஏதோன்னு போறவனுக்குத் தான் இது காலம். விதை நெல்லு கேட்டேன், வீசி போட்டாரு ஒரு பத்து ரூபா காசு. எங்காவது போய் வாங்கிக்கோ, எனக்குத் தாரேன்னு சொன்னவன் ஏமாத்திப்போட்டான்னு ஜம்பமாச் சொல்லிப் போட்டாரு. ஓடினேன் ஒன்பதாவது மைலுக்கு. அங்கேபோய் ஆண்டியைக் கெஞ்சிக் கூத்தாடி விதை நெல்லை வாங்கிகிட்டு வந்தேன்—உனக்குந்தான் தெரியுமேப்பா, கொல்லை மோட்டுப் பக்கம் வெறி நாய் என்னைக் கடிச்சுப்போட்டுதேல்லோ. இவ்வளவு பாடுபட்டா, இவரு வந்து பேசறாரு, வேலைச் சுத்தமில்லைன்னு. என்னத்தைக் கண்டாரு, விவசாயத்தைப் பத்தி. பாடுபட்டு வயலு பச்சைப் பசேலுன்னு பார்க்கப் பதினாயிரம் கண் வேணும்னு இருக்கும்போது, ஏக்கர் மூவாயிரம் நாலாயிரம்னு பெருமையாகப் பேசறாரு. இந்த மொத்த நிலமும், முன்னாலே, அவக பாட்டனார் இரண்டாயிரத்துக்கு வாங்கனாரு. தலைமுறை தலைமுறையாக நாங்க

பாடுபட்டு, வயலே, சீராக்கினேம். நம்ம குடிசைக்கு ரெண்டு புது ஓலே போட பணமில்லே அவரு மாடி வீடு கட்டிகிட்டு, இப்ப நியாயம் பேசவர்ராரு. தள்ளு பொன்னு! நம்ம நிலமா இருக்கோணும், பாடுபட்டா பலன் வரும் என்கிற நிலே இருக்கும்" என்று உழுபவன் உள்ளம் நொந்து பேசுகிறன். ஒருபுறம் சந்தேகம்; மற்றோர் புறம் சோகம்! இதற்கிடையிலே வயல் வளமாக வேண்டி இருக்கிறது.

உழுதுண்டு வாழ்வானே வாழ்வான், மற்றவர்கள் தொழுதுண்டு பின் செல்பவர்கள் என்று நகரத்திலே படிக்கிறேம். படித்தான பிறகு, நமக்கே எண்ணம் அதுபோலிருப்பதில்லே. அவன் பட்டிக்காட்டான் என்றுதான் கேலி செய்கிறேம்.

இதனல் இருதரப்பிலும், பேதமும், கசப்பும் வளருகிறது என்பது மட்டுமல்ல, விவசாயத்தின் தரமும் குறைந்து விடுகிறது. இதனே எண்ணித் தான், சொந்தமாக நிலத்தைப் பராமரிக்காதவனிடம் நிலம் இருப்பது சீர்கேடான முறை; நிலம் உழுபவனுக்கு இருக்கவேண்டும் என்ற கொள்கை இன்று வலிவுபெற்று வருகிறது.

கிராமப்புறங்கள் பெரும்பாலும், இதுபோலத் தான். சொந்தக்காரன் என்ற உரிமை பெற்றவர்கள் எங்கோ, எப்படியோ இருக்க, உழைக்கும் ஒரு கூட்டத்தினரிடம் நிலம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. நிலத்தின் அமைப்பு, தரம், ஆகியவை கூடத் தெரியாமல், எவ்வளவோ சொந்தக்காரர்கள் உள்ளனர். ஏட்டைப் புரட்டியோ, எதிரிலே



அடக்க ஒடுக்கத்துடன் நின்றுகொண்டு பதில் கூறும் கணக்கெழுதுபவர் கூற்க்கேட்டோ தனக்குள்ள 'பூமி'யின் அளவையும் வகையையும் தெரிந்துகொள்ளும் சீமான்கள் ஏராளம்!

"காவூர் நிலத்திலிருந்து என்ன வந்தது" என்று பண்ணேயார் கொஞ்சம் முடுக்காகக் கேட்கிறார். பக்கத்திலே அவருடைய குச்சுநாய் நிற்கிறது. மேஜை எதிரே, மங்கம்மா விளம்பர ரூபத்தில் காட்சித் தருகிறாள்.

"காவூரிலே, ஒரு இருவது கலம் தானுங்க கிடைத்தது" என்று கணக்கெழுதுவோர் சொல்கிறார்.

தேள் கொட்டினவர் போலாகிறார், பண்ணேயார். ஏனெனில் காவூரிலே நாலு ஏக்கர் பூமி இருப்பது அவருக்குத் தெரியும். அந்த இடத்திலே இருந்து இருபதேகலம் கிடைத்தது என்றல் கோபமாகத் தானே இருக்கும்.

"என்னடா சனியன்! ஏண்டா அங்கே, என்ன, விதைத்த நெல்லே பொறுக்கிக்கொண்டு வந்து கொடுத்தார்களா? இருவதுகலம்—ஏண்டா, ஏக்கருக்கு 5 கலமா! என்னடா அநியாயம் இது?" என்று கண்டிக்கிறார்.

"நாலு ஏக்கர்தானுங்க. ஆனா எல்லாம் மேட்டுக்கால்தானே. இந்த வருஷம் ஒரே ஏகர் தான் பயிர் வைத்தது—மற்றது சும்மாவே போட்டு விட்டோமே" என்று விளக்க முறைக்கிறார் கணக்கெழுதுபவர்.

"இந்த மாதிரி வறட்சியான பூமியை விற்றுத் தொலைக்க வேணும்" என்று புது யோசனை கூறுகிறார் பண்ணையார். ஒரு கனைப்பின் சத்தம் கேட்கிறது. திரும்பிப் பார்க்கிறார். சமையல் அறைப் பக்கமிருந்து கொண்டு துணைவியார் ஜாடை காட்டுகிறார்கள் வரச்சொல்லி. சென்று கேட்கிறார் என்ன என்று.

"என்னங்க இது? காவூர் நிலத்தையா விற்கணும்னு பேசறீங்க! அது ரொம்ப அதிர்ஷ்டமான நிலமாச்சுங்களே!" என்கிறாள் அந்த அம்மையார். "கலம் இருவது—விளைச்சல் இந்த இலட்சணம், தெரியுமா?" என்று விவசாயம் பேசுகிறார் அந்த அம்மையிடம்.

"ஆமா, அந்த நிலத்திலே விளையலேன்னா நமக்குப் பட்டினியாக்கும் போங்கோ! அந்த நிலத்தை வாங்கின பிறகுதான்........" என்று அம்மை கூறிவிட்டு, வாசகத்தை முடிக்காமல், விழியை மலரச் செய்கிறார்கள். அவர் புரிந்து கொள்கிறார். அந்த நிலம் வாங்கினபிறகுதான் அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது! கலம் இருவது ஆனாலென்ன, இரண்டுதான் ஆகட்டுமே, கருவேப்பிலைக்கொத்து போல ஒரு குழந்தை, அதிலும் ஆண்குழந்தை பிறந்தது, நிலம் வாங்கினபிறகுதான். எனவே நிலத்தை விற்கக்கூடாது என்று அவரும் தீர்மானித்துக்கொள்கிறார். மனைவியின் கன்னத்தைக் கிள்ளிவிட்டு, "நன்றாகக் கவனமிருக்கே உனக்கு" என்று கேலிபேசிவிட்டு, மீண்டும் கணக் கெழுதுபவரிடம் வந்து பேசுகிறார்.



"சரி, காவூர் கதை அவ்விதமாச்சி. பூவூர் நிலத்திலே என்ன கிடைச்சுது?"

"பூவூர் நிலத்திலே இந்த வருஷம் சவுக்கில்ல வைச்சிருக்கோம்."

"ஆமாண்டா, அதுதான் என்ன ஆச்சின்னு கேட்கிறேன்?"

"அது ஆவறது என்னங்க! வளருது. இன்னம் வருஷம் ஐந்து ஆவணுமே!"

"தொலையட்டும். பாவூர், கொல்லையிலே........" அதிலே வழக்கப்படி வந்திடுச்சிங்க!"

"எவ்வளவுடா?"

"போன வருஷமாட்டாம், மூணுவண்டித் தான்."

"ஆமாம்! புதிசா ஏதோ ஒரு துண்டு வாங்க வேணும்னு சொன்னயே, அது என்ன ஆச்சு?"

"ஆமாங்க, அந்தத் துண்டு வாங்கிவிட்டா, இப்ப நமக்கு இருக்கிற 3½ யோடு சேர்ந்து ஒரே சதுரமா, நாலு ஆயிடும்!"

"அங்கே 3½ ஏதுடா நமக்கு?"

"என்னாங்க! போனவருஷம் ஒரு முக்கா ஏக்கர் துண்டு வாங்கினமே அதுக்கு முந்தி நமக்கு, உங்க அப்பார் காலத்திலே ஒரு ஏக்கருங்க. கண்ணுசாமி கடன் பைசல் செய்யறபோது அவன் நிலத்தை நமக்கே கொடுத்துட்டான். எல்லாம் சேர்ந்து இப்ப 3½ ஏக்கர் இருக்குங்களே!"

"ஆமாம், ஆமாம்!"

"நீங்க ஒரு தடவை வந்து பார்க்கணுமுங்க நிலத்தை. நிலம் ரொம்பத் தரம்."

"பாச்சல் இருக்கா?"

"பக்கத்திலேயே கால்வாய் போகுதுங்களே. அந்தக் கால்வாய் வருவதற்கு முன்னே நிலம் தம்பிடிக்குப் பொறாதுங்கோ. இப்பக் கிளி கொஞ்சுதுங்கோ!"

"சரி! மத்ததை சாயரட்சை கணக்குப் பார்க்கிறேன், எடுத்துவை புத்தகக் கட்டுகளை" என்று கூறிவிட்டுப் பேச்சை முடித்துவிடுகிறார் பண்ணையார். நிலத்திலே கிளிகொஞ்சுகிறது வந்து பார் என்று கணக்கெழுதுபவர் அழைக்கிறார். உள்ளேயிருந்து குழந்தை அழுகிற குரல் கேட்கிறது. சென்று குழந்தையையும் சமாதானப்படுத்தலாம்... ......கிளியும் கொஞ்சும், கேட்கலாம் என்று உள்ளே போய்விடுகிறார். பெரிய பண்ணையின் சொந்தக்காரரில் நல்லவரின் விசாரணை முறை இது. இன்னும் வேறு "புண்யவான்கள்" இருக்கிறார்கள். மிலாரும் கையுமாக இருப்பவர்கள்! கம்பத்திலே கட்டிவிட்டுக் கணக்குக் கேட்பவர்கள்! காரித் துப்பிவிட்டு வாசற்படி ஏறாதே என்று சீறுபவர்கள்! இத்யாதிகள்!!

மற்றப் பல முதலாளித் துவத்தைவிட நில முதலாளித் துவமிருக்கிறதே அது மனிதத் தன்மையை மாய்ப்பதிலே, முதல்தரமானது. குடும்பம் குடும்பமாக, இந்த முதலாளித் துவத்துக்கு அடிமை



யாகி, தலைமுறை தலைமுறையாக, காலில் வெள்ளெலும்பு முளைத்தநாள் முதலாய் அடிமைக்காரனாய்யே! என்று நந்தனார் பாடினார் என்கிறார்கள் கதையில். வாழ்க்கையிலே இதைப் பாடிச் சொல்வதில்லை. ஆனால் உண்மை நிலை என்னவோ இதுதான். கிராமத்திலே உள்ள விவசாயிக்கு, பண்ணையாரிடம் இருக்கும் பயம், 'பத்ரகாளியிடம்' இருக்கும் பயத்துக்குச் சமம்! ஐயா—சாமி—ஆண்டே—எஜமான்—அவுரு—என்று அர்ச்சனை செய்வான். கோயிலுக்குப் போவது போலவேதான், அடக்க ஒடுக்கமாகப் பண்ணை வீட்டுக்குப் போய் வருவான். இடுப்பிலே வேட்டியைக் கட்டிக்கொண்டு, காலிலே முள் தைத்தாலும் பரவாயில்லை என்று செருப்பு இல்லாமல்தான் போவான். பண்ணையாரைக் கண்டவுடன் அடியற்ற நெடுமரம்போல் வீழ்வான்—ஒருமனு என்பான்! அவ்வளவு அடிமைத்தனம், நிலச்சுவான்தார் முறையின்மூலம் ஏற்பட்டிருக்கிறது. ஜெமின்களில் மட்டும் அல்ல; பெரிய பண்ணைகளிலெல்லாம் இதே நிலைதான் இருக்கும். இதனை ஆங்கிலத்திலே ப்யூடெலிஸம் (FEUDALISIM( என்பார்கள். ஏன் என்ற கேள்விக்கே இடமில்லாத அளவுக்கு, மனதிலே அச்சத்தை நிரப்பிவிட்டு, மனிதர்களை அடிமைகளாக்கும் முறை அது; நிலத்தை உழுவதுமட்டுமல்ல—எஜமான் காரியம் எதுவானாலும் செய்யவேண்டியவன்—எடுபிடிக்கு அவன்தான்—அடி ஆள் அவன்தான்—நல்லது பொல்லதுக்கு அவன்தான் உழைக்கவேண்டும்—தன்வீட்டிலே ஒரு கலியாணம் ஒரு இழவு, எதற்கும் எஜமானிடம் உத்திரவு வாங்கியாகவேண்டும். கிரா

மத்திலே எந்தக் காரியம் செய்வதானாலும், எஜமானிடம் கேட்டுவிட்டுத்தான் செய்ய வேண்டும். எஜமான் சொன்னால் அதைச் செய்தாகவேண்டும். 'ஒருவன் தலையை வெட்டிக்கொண்டு வா' என்றாலும் செய்யத்தான் வேண்டும். இந்த மாதிரியான மனப்போக்கு, இந்த நில முதலாளித் துவமுறையினால், பரம்பரை பரம்பரையாகப் புகுத்தப்பட்டிருக்கிறது. எனவேதான் நகரப்புறத்திலே வீசும் கொஞ்ச நஞ்சம் விடுதலையும், சுயமரியாதை உணர்ச்சியும், கிராமப்புறத்திலே தலை நீட்டத் தயங்குகிறது. பண்ணையாரின் தயவின்பேரிலே, ஏதாவது பிரசங்கம் நடத்தலாம், யாராவது. அவ்வளவுதான், வேறே ஜனங்களின் சார்பில் ஏதாவது பேசவேண்டுமென்றால், முடியாது. அதிகாரிகளின் அமுலாவது நடக்குமா! கஷ்டம். சாமர்த்தியமுள்ள அதிகாரிகளாக இருந்தால், அவர்களும், "ஐயாவின் தயவைப்" பெற்றுக்கொண்டு, ஏதோ 'நாலு காசு' சம்பாதிக்கலாம். முறைப்புக்காரராக இருந்தால், ஒன்றும்பலிக்காது. திடீரென்று அதிகாரியின் மாட்டுவண்டி காணாமற் போகும்; வீட்டின்மீது கற்கள் விழும்; கொல்லைச் சுவர் இடிந்துவிடும்; வாழைக்கன்றுகள் வெட்டப்பட்டிருக்கும், வாழ்க்கை நிச்சயமே இல்லாதபடி செய்யப்படும். ஒன்று அவர் வேறு ஊர் மாற்றிக்கொண்டோடவேண்டும், இல்லையானால் ஐயாவுடைய 'தயவைப்' பெறவேண்டும். இந்த விதமான ஆதிக்கம் கொண்டு, கண்ணுக்கு எட்டியதூரம் நிலத்தைச் சொந்தமாக்கிக்கொண்டு, காட்டு ராஜாக்கள் போலக் காலந்தள்ளுபவர்களுக்கு செல்வத்தையும் சுகத்தையும், சொத்துக்களையும் தேடிக்கொடுப்ப



தற்காக காலையிலே கோழியுடன் எழுந்து இரவு கோட்டான் கூவும்போதும் கொல்லைமேட்டைப் பற்றியே எண்ணிப் புரளும் உழவன் உழல்கிறான். ஊர் வளம்பெற, ஊரார் அமைதிபெற, உன்னத இலட்சியங்கள் உரம்பெற, இது அல்ல முறை—முறை மாறியாகவேண்டும்; மாற்றப்படவேண்டும். கிராமப்புறத்திலே "அடக்க ஒடுக்கம்" இன்று இல்லை. இருக்கமுடியாது! மிச்ச மீதி இருப்பதும் விரைவிலே நசித்துப்போகும். அவனிடம் பல ஆண்டுகளாக ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை, அடிமைத்தனத்தை ஒழிக்கவேண்டிய அவசியத்தைப் பேசியாகிவிட்டது; இன்று அவன் தன்னை வாழ விடாமல் செய்பவர் "ஆண்டை" என்பதை அறிந்துகொண்டான்; ஆகவே அவன் போர்க்கோலத்தில் இருக்கிறான். ஏர் கொண்டுழைத்து, நாட்டுக்குச் சீர் அளிக்கும் உழவனின் உள்ளம் குமுறுவதால், ஏர் முனை மழுங்கி விடுகிறது! வளம் குறைகிறது! செல்வம் குன்றுகிறது. அம்மட்டோடு நில்லாது! ஏர் முனையினால் நாடு வளம் பெறுவதற்குப் பதிலாக, உழவர்கள், போர்முனை புகுவதாக முடியுமே! ஏர்கொண்டு உழைத்தவர்களை, என்றென்றும் ஏமாளிகளாகவே வைத்திருக்க முடியுமென்றெண்ணி, அவர்களைப் போருக்கு அழைக்கின்றனர் பிரபுக்கள்! விளைவு என்னாகும்? வரலாறு கூறும், நாம் கூறுவானேன்?

பரம்பரை பரம்பரையாக, ஏதேதோ காரணத்தால், சிலருக்கு ஜெமின் உரிமை தரப்பட்டது. அவர்கள் கூறுவர், நான் அந்த நவாபுக்கு உதவி

செய்தேன், இன்ன ராஜாவுக்கு நான் படை தந்தேன், என்று பல காரணங்களை. வேடிக்கைக்காகவும் பொழுதுபோக்காகவும் பேசும்போது வேறு காரணங்களை ஊரார் கூறுவர். "அந்த ராஜா; ஒருநாள் பாதித் தூக்கத்திலே இருந்தானாம். கொஞ்சம் மயக்கமாக இருந்ததாம். போதைக் கட்டிலிலே புரண்டபடி கண்ணு! கண்ணு என்று குளறினான். உடனே, கண்ணன், (அவன் தானே அங்கு காவற்காரனாக இருந்திருக்கிறான்) ராஜா ஏதோ கூப்பிடுகிறானே என்று வேகமாக அங்கு சென்றிருக்கிறான். போதையிலே இருந்த அந்த ராஜா அப்படியே அவனைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு, கண்ணு! கண்ணு! என்று கொஞ்சி முத்தமிட்டு, கர்மம் கன்னத்தைக் கூடக் கடித்து விட்டானாம். கண்ணன் பாவம், இந்தத் தொல்லையைப் பொறுத்துக்கொண்டிருந்துவிட்டு, பிறகு விலகி, "மகாராஜா! நான், கண்ணன்! காவல்காரன்!" என்று பயத்துடன் பேச, ராஜா சிரித்து விட்டு, "அடெ இழவெ! நான் கண்ணுமணி என்று அல்லவா எண்ணினேன். தொலையுது வெளியே இதைச் சொல்லாதே" என்று கேட்டுக்கொண்டு, கண்ணனுடைய பொறுமைக்கு மெச்சி, அவனுக்கு போதையூர் ஜெமீனைக் கொடுத்தாராம். அந்தக் காவக்காரக் கண்ணனுடைய பேரன், இந்த ராவ் பகதூர் ரங்கதுரை, தெரியுமா? இந்த ஜெமீன் கிடைச் சவிதம்" என்று ஒருவர் சொல்வார்.

"காலமுக்கி ஜெமீன் தெரியுமாப்பா உனக்கு" என்று இன்னொருவன் கேட்பான். 'அதென்னடா



நாஸ்திகர்களின் சட்டம் இது—என்று T. R. வெங்கட்ராம சாஸ்திரியார் அப்போது ஆர்ப்பரித்தார்—இப்போதுபோலவே. ஓடி ஓடி மாநாடுகள் கூட்டினார். பாபட்லாவில் நடந்த ஒரு மாநாட்டிலே, ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்களான ஜமீன்தாரர்களும், தொண்டர்களான புரட்சிக்காரர்களும், ஒன்று கூடிக்கொண்டு, இனாம்தாரர்களை ஒழிக்கச் சதி செய்கிறார்கள் என்று ஓலமிட்டார். இதை சட்டமாகும்படி விடமாட்டேன் என்று சபதம் செய்தார். அப்போதும், அவர் அகில உலகத்திலே உள்ள நாடுகளின் சட்ட புத்தகங்களைச் சாட்சிக்கு இழுத்தார்.

காங்கிரஸ் தலைவர்கள், சாஸ்திரியாருடன் கை கோர்த்துக்கொண்டு, எந்தச் சட்டம் உண்மையாகவே, நிலமுதலாளித்துவத்தின் ஒரு பகுதியைத் தாக்கி, ஏழை உழவனுக்கு உரிமை கிடைக்க வழி செய்ததோ, அதே இனாம் சட்டத்தை எதிர்த்துப் பேசி, பொதுமக்கள் மனதைக் கலைத்தனர்.

ஜஸ்டிஸ் மந்திரிகள் சட்ட புத்தகங்களைச் சட்டை செய்யவில்லை. சாஸ்திரியாரின் புலம்பலைப் பொருட்படுத்தவில்லை. இனாம் குடிகளின் நன்மையைக் கைவிட முடியாது என்று தெளிவாகக் கூறி விட்டனர்.

மயிலையும், திருவல்லிக்கேணியும் கவர்னரிடம் தஞ்சம் புகுந்தன. கவர்னர் மயிலை மகிமையாலும், திருவல்லிக்கேணி தரிசன விசேஷத்தாலும் சொக்கிப்போனார். சட்ட சபையிலே, இனாம்

செய்தேன், இன்ன ராஜாவுக்கு நான் படை தந்தேன், என்று பல காரணங்களை. வேடிக்கைக்காகவும் பொழுதுபோக்காகவும் பேசும்போது வேறு காரணங்களை ஊரார் கூறுவர். "அந்த ராஜா, ஒருநாள் பாதித் தூக்கத்திலே இருந்தானும். கொஞ்சம் மயக்கமாக இருந்ததாம். போதை. கட்டலிலே புரண்டபடி கண்ணா! கண்ணா என்று குளறினான். உடனே, கண்ணன், (அவன் தானே அங்கு காவற்காரனாக இருந்திருக்கிறான்) ராஜா ஏதோ கூப்பிடுகிறானே என்று வேகமாக அங்கு சென்றிருக்கிறான். போதையிலே இருந்த அந்த ராஜா அப்படியே அவனைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு, கண்ணு! கண்ணு! என்று கொஞ்சி முத்தமிட்டு, கர்மம் கன்னத்தைக் கூடக் கடித்து விட்டானும். கண்ணன் பாவம், இந்தத் தொல்லையைப் பொறுத்துக்கொண்டிருந்துவிட்டு, பிறகு விலகி, "மகாராஜா! நான், கண்ணன்! காவல்காரன்!" என்று பயத்துடன் பேச, ராஜா சிரித்துவிட்டு, "அடே இழவே! நான் கண்ணுமணி என்று அல்லவா எண்ணினேன். தொல்லையுது வெளியே இதைச் சொல்லாதே" என்று கேட்டுக்கொண்டு, கண்ணனுடைய பொறுமைக்கு மெச்சி, அவனுக்கு போதையூர் ஜெமீனைக் கொடுத்தாராம். அந்தக் காவக்காரக் கண்ணனுடைய பேரன், இந்த ராவ் பகதூர் ரங்கதுரை, தெரியுமா? இந்த ஜெமீன் கிடைச் சவிதம்" என்று ஒருவர் சொல்வார்.

"காலமுக்கி ஜெமீன் தெரியுமாப்பா உனக்கு" என்று இன்னொருவன் கேட்பான். 'அதென்னடா கர்மம்?' என்றுகேட்பான் வேறொருவன். "அதுவா! கேள்டா, கர்நாடக ராஜாவுக்குக் கால் அழுக்கிற உத்யோகம் ஒருவனுக்கு. ஒருநாள், ராஜாவுக்கு ரொம்பச் சுகமாகக் கால் அழுக்கினும். அந்தச் சந்தோஷத்தாலே ராஜா, 'டே! உனக்கு என்னடா வேணும்? கேள்டா!' என்றானும். அந்தப் பய, இளித்துக்கொண்டே இருந்தான், புது வேட்டி கேட்கலாமா, கொஞ்சம் பொன் கேக்கலாமான்னு. ராஜாவே "டே! வடக்கே இருக்கே குடகுமலை, அதிலே இருந்து, அதுக்குப் பத்தாவது மைலிலே இருக்குபாரு பனந்தோப்பு, அது வரையிலே உனக்கு ஜெமீனைக் கொடுத்துவிட்டேன், போடா" என்று சொல்லி விட்டாராம். அதற்குத் தான் காலமுக்கி ஜெமீனுன்னு பேரு" என்று பேசுவான்.



இன்னம் வேடிக்கையாக; சிலது விபரீதமாக, சிலது ஆபாசமாகக்கூட இருக்கும் இந்த ஜெமீன் மானியம், மிராசு, பாத்யதை என்ற பல பெயரால் கிடைத்துள்ள நிலங்களின் கதைகளை விசாரிக்கப் போனல்.

பொது உண்மை என்னவென்றால், அரசன், தன்னைச் சுற்றி அதிகார தேவதைகளை அமைத்துக்கொள்வது, தன் அரசபீடத்துக்கு ஆட்டம் வராமலிருக்கவே, இந்த ஏற்பாட்டை செய்து கொண்டான். என்பதுதான்.

பூபதி, பிரபு, புரோகிதன், இந்த முக்கூட்டு, முதலாளித்துவ அச்சிலே நெடுங்காலமாக இருந்து வருகிறது.

பிரிட்டிஷார் ஆளவந்ததும், தங்களுக்கு "ஆமாம் சாமிகள்" வேண்டும் என்பதற்காக, இந்தப் பிரபுக்களை உண்டாக்கிக் கொண்டனர். தொப்பி போட்ட துரையைச் சுற்றி ஜரிகைக் குல்லாய் அணிந்த ஜெமீன்தாரன்; "இருவரும் நீடூழிகாலம் வாழணும்னு பரந்தாமனைத் தோத்தரிக்கிறேன்" என்று கூறி, ஜெபமாலையும் கையுமாக நிற்கும் புரோகிதன்; முதுகெலும்பு முறியப் பாடுபட்டு, இந்த மூன்று ரகத்துக்கும் சுக வாழ்வு அளிக்க, விவசாயி! இதுவே முதலாளித்துவ முறை. இந்த முறைக்குத்தான் இன்று முறிவு ஏற்பட வேண்டும் என்கிறோம். ஒன்றை விட்டு விட்டு, மற்றதை முறிப்போம் என்றால் முடியாது. சுயநலம், சுயசுகம் என்ற பசைபோட்டு இந்த மூன்று வகைகளும் ஒட்டப் பட்டிருக்கின்றன. சம்மட்டி அடி, சரி சமமான பலத்துடனும் வேகத்துடனும் மூன்றின்மீதும் விழவேண்டும். விழும்!

பயிரிடும் பாட்டாளியின் வாழ்க்கையைச் சுமையாக்கி விடுவது பண்ணை முதலாளிகளுக்கு ஆரம்பத்திலே பெரிய இலாபமாகத் தோன்றுகிறது. அவனை அடக்கி ஆள்வதிலே ஒரு வகை ஆனந்தம் பிறக்கிறது. ஆனால் நீண்டகால நோக்குடன் கவனித்தால், அவர்கள் தங்களுக்கும் தமது ஆதிக்கத்துக்கும் குழி தோண்டிக் கொள்வதோடன்றி, விவசாயத் தொழிலுக்கும், அதன்பயனாக நாட்டுச் செல்வ வளர்ச்சிக்கும், ஊறு தேடுவதைத் தெரிந்து கொள்ளலாம். காலமெலாம் பாடுபடுபவனை அரைப்பட்டினியாகவே வைத்திருப்பதால், அடிமையாக நடத்துவதால், அவன் விவசாயத்திலே அக்கறையற்று, பிறகு திறத்தையும் இழந்து போவதுடன், சமயம் கிடைத்ததும், இந்தச் செக்கு மாட்டு வேலையைவிட எங்காவது கல் உடைக்க வேணும் போகலாம் என்று நகரத்துக்குச் சென்று விடுகிறான். விவசாயத்துக்குப் போதுமான, தரமான ஆள்வசதியும் குறைந்து விடுகிறது. அதற்கு ஏற்றவண்ணம், மாசூல் மட்டமாகி விடுகிறது. பிறகு விவசாயம் கட்டிவருவதில்லை என்ற பேச்சு எழுகிறது. சலிப்பும், சோகமும் நிரம்பிய விவசாயி ஒரு புறமும், அதிகாரமும் ஆணவமும் கொண்ட சுகபோகி மற்றோர் புறமும் இருந்துகொண்டு, விவசாயத்தை எப்படி வளமுள்ளதாக்க முடியும்?



தேவையான அளவு, தன்னால் நேரடியாகக் கவனித்துப் பராமரிக்கக்கூடிய அளவு, (ஆசைக்கேற்ற அளவல்ல. அதுதான் அண்டை வயலின் மீது சென்றபடி இருக்குமே! அகிலத்தின் கடைசீ ஏகர் போகும்வரை) நம்மால் நிர்வகிக்கக்கூடிய அளவு, நமது குடும்பத்தின் தேவைக்குத் தக்க அளவு நிலம் இருக்கவேண்டும் என்ற எண்ணம், இன்றுள்ள பண்ணை முதலாளிமார்களுக்கு ஏற்பட வேண்டும். ஏற்படுமா? ஏற்படாது! மனித சுபாவம் அது. பண்ணையாருக்கும், நிலத்துக்குப் பக்கம் வேறோர் நிலம் தேடும் எண்ணம்தான் உண்டாகும்; விவசாயத் தொழிலாளிக்கு அவன் நிலைக்கு ஏற்றபடி, தன் மாட்டின் கழுத்துக்கு இரண்டு மணி கிடைத்தானதும், மூன்றாவது மணியும் கிடைக்காதா என்ற எண்ணந்தான் உண்டாகும்

கும். நாம் இவர்களில் யாரையும் புத்தராக்க முடியாது! ஆனால் புதியதோர் திட்டம், சட்ட மூலம் செய்யலாம்—செய்து இருக்கிறார்கள் வேறு நாடுகளில் — இங்கும் இப்போது ஜமீன் ஒழிப்பு என்னும் திட்டம், புதுத்திட்டத்துக்கான ஆரம்ப வேலை என்றே நம்புகிறோம்!

பயிரிடுபவனைப் பாடுபடுத்தாதே!

நியாயமான, வாரம் கொடு.

நிலத்தை, முதலாளித்துவமாக்காதே!

ஜமீன், மிட்டா, மிராசு, பண்ணை பாத்யதை ஆகியவைகளைக் கலைத்துவிடு.

நிலமற்ற கூலி விவசாயியினால் நாட்டின் செல்வநிலை உயராது. உரிமை கொண்டாடி, உழைக்க முன்வராத பண்ணை முதலாளியினாலும் நாட்டின் செல்வநிலை உயராது. இப்படி இரு சாரார் இருக்குமட்டும், செல்வநிலை உயராது, விவசாயம் செழிக்காது என்பது மட்டுமல்ல; கிராமப்புறம் வளமாக இராது; அங்கு வறுமை ஒழியாது; கற்குறித்தனம் நீங்காது.

தஞ்சை மாவட்டத்திலே, சாம்பவசிவ ஐயர்—சாமியப்பா முதலியார் — ஆசிரியர் — திராவிடர் என்று நாம் நினைக்கிறோம். ஒருவரைக் காங்கிரஸ் என்றும், மற்றவரை ஜஸ்டிஸ் என்றும் சொல்கிறோம்—அவரவர்களுக்கு வேறு வேறு கொடி இருப்பதாக நாம் எண்ணுகிறோம்—பெருமையுடன்



பேசிக்கொள்கிறோம். குத்தகைத் தகராறு—வாரத் தகராறு—இவைகளின் காரணமாக, விவசாயிகளின் கிளர்ச்சி நடக்கும்போது, என்ன காண்கிறோம்? ஆரிய சாம்பசிவ ஐயரும் திராவிடச் சாமியப்பாவும், காங்கிரஸ் மந்திரி பாஷ்யம் ஐயங்காருடன் பேசி, திராவிடக் கந்தசாமியின் கொட்டம் ஒழிக்கப்பட வேண்டும் என்று மந்திராலோசனை செய்கிற வேடிக்கையை—வேடிக்கையா அது? வேதனை!

ஏன் சாமியப்பாவைக் குறித்தோம் எனில், பண்ணையிலே பாடுபடும் உழவர்கள் திராவிடர்கள். அவர்களின் வாழ்வு செம்மைப் படுத்தப்பட வேண்டுமென்பதே திராவிடர் கழக நோக்கம். எனவே அந்த உழவர் விஷயமாக மற்றவர்கள் எந்த முறையைக் கையாண்டாலும், நாம் திராவிடன் என்ற உணர்ச்சியோடு நடந்து வழிகாட்டியிருக்க வேண்டும். ஏனெனில், அவர்களும் நாமும் ஒரே இனம் என்ற எண்ணம் அவருக்குத்தானே ஏற்பட வேண்டும்—சாம்பசிவ ஐயருக்கு ஏற்படத் தேவையில்லை. ஆனால் நடந்தது என்ன? ஆரியமும் திராவிடமும் இந்த விஷயத்திலே ஒன்றாகி நின்றது—பண்ணையார் என்ற உருவில். நண்பர் சாமியப்பா, நல்ல மனமுடையவர்—முற்போக்கான கொள்கையை அறிந்தவர்—அவரே இந்தப் பிரச்னையில் இது போல் நடந்து கொள்ளவேண்டி இருந்தது என்றால், குற்றம் தனிப்பட்டவர்களின் குணத்தைப் பொறுத்து இல்லை; அவர்களின் நிலையைப் பொறுத்துதான் இருக்கிறது என்பது விளங்குகிற

தல்லவா? ஆகவேதான், நம்மைப் புரிந்துகொள்ளக்கூடிய நண்பரின் பெயரை எடுத்துக்காட்டுக்குக் கூறினோம். பெயரைக் கேட்டாலே, நமக்குக் கசக்கும் வேறு பண்ணை முதலாளிகளும் உள்ளனர், நூற்றுக்கணக்கிலே அவர்களுக்கு நாம் கூறுவதுபுரியாது. எனவே அவர்களைக் குறித்து எழுதவில்லை.

உழவனின் உழைப்பின் வெற்றியைக்காட்டுவது பொங்கல் விழா! அறுவடை விழா. ஆம்! புத்தாடையும் புத்துணவும் புன்னகை பூத்த முகத்தழகும், ஓர் நாள் விழாவுக்குப் போதுமானவையாக இருக்கலாம். வாழ்வு விழாவாக வேண்டும். அங்ஙனமாதலே முறை. அதற்கே, அரசியல் அமைப்புகள், அவற்றினைக் கட்டிக்காக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகள், அவைகளின் பாதுகாப்புக்காக, ஏற்படும் போர் முகாம்கள், போன்ற பலவும்! அலைகிறான், அலைகிறான் ஓயாது! தேடுகிறான் திக்கெல்லாம்! எதிர்ப்பட்டோரை எல்லாம் கேட்டுப் பார்க்கிறான். இதிலா, அதிலா, எதில் கிடைக்கும், கருதாத களிப்பு என்று ஆராய்கிறான். அறிவுடை மனிதன். சித்தாந்தத்திலே, வேதாந்தத்திலே மோனத்திலே, பரமன்பற்றிய ஞானத்திலே, கலையிலே, எதிலெல்லாம் கிடைக்கும் 'வாழ்வின் சுவை' என்று தேடியவண்ணம் இருக்கிறான் தெளிவுள்ள மனிதன்; அஃதற்றவன் ஆமையாகிறான்! வான வெளியிலே அலையும் பறவை தன் வாழ்வுக்கான இடத்தை அடைய கனலை, காற்றை, கடுங்குளிரை கண்ணிகளையெல்லாம் பொருட்படுத்தாமல்,



பரப்புக்கள் பலவற்றைப் பார்த்து அலுத்தாலும், மீண்டும் தேடிடும் பணியைத் தொடர்ந்து நடத்தி, தன் இலட்சிய பூமியைச் சென்று அடையும் வீரன் போல, அருகே ஓர் நீர் நிலையம் நறுமணச் சோலை, அதனருகே விளை நிலம், இடையே பகைவரிடமிருந்து தப்பிடும் பக்குவமமைந்த இடம் இவ்வளவும் கண்டு, அங்கு தங்குதல்போல், அறிவுள்ள மனிதன், தன் வாழ்க்கைக்கு ஓர் "இடம்" தேடுகிறான்! ஆம் அவன் வாழ விரும்புகிறான்; வறியோனாக வதைய மறுக்கிறான்; வஞ்சகனாக வாழ்வது தன் மானத்தை அழிக்கும் எனவே அதனை வெறுக்கிறான், உள்ளது போதும் என்றுரைக்க மறுக்கிறது உள்ளம், கண் எதிரே வளமுள்ள வாழ்வு நடாத்துபவர் தெரிவதால்! எனவே, வாழ்வுக்கான போர் நடத்துகிறான்—அவன் விரும்புவது வாழ்வு—தனக்கும் மற்றவர்க்கும்—புது வாழ்வு. அந்த வாழ்வு, உழவனுக்கும் வேண்டுமே! எங்கே அவன் பெற முடிகிறது? ஜமீன்முறையும், பெரிய பண்ணைகளிலே நடைபெறும் படாடோபமும் அவனைப் பாழ்படுத்துகிறது. வாழ்வு சுமையாகி அவன் வளைந்து போயிருக்கிறான். வாயில்லாப் பூச்சி, பொறுமையின் இருப்பிடம், உழைப்பதில் அலுப்புத் தட்டாதவன் என்று அவனைப்பற்றிப் பேசப்படுகிறது. அவன் வாழ்க்கையிலேதான் திருப்தி இருக்கிறது. ஏனெனில் அவனுக்குள்ள தேவைகள் மிகச் சொற்பம். அவன் என்ன காலையிலே காப்பிக்கு அலையப்போகிறானா, மாலையிலே மினுக்குத் தைலம் கேட்பவனா, விதவிதமான வேட்டி, சட்டை போடுபவனா, வேளாவேளைக்கு ருசிகரமான பண்டங்கள் தேடுகிறானா

கலயத்திலே உள்ள கஞ்சி போதும் என்று இருக்கிறான்; நாகரிகம் என்ற நச்சுச் சுழலிலே சிக்கவில்லை என்று பேசப்படுகிறது. பாதி வாழ்வு அவனுடையது; அந்தப் பரிதாப உண்மையை இந்தப் பசப்பும் திரைபோட்டு மூடிவைக்கிறார்கள். பல நாட்களுக்கு இம்முறை பலிக்குமா? இன்று உழவன் உரிமை கேட்கிறான்; ஊரார் இதனை 'உற்பாதம்' என்று எண்ணுகின்றனர்; ஊராள்வோர் இந்தப் புதிய உபத்திரவத்தை முளையிலேயே கிள்ளி எறிந்தாக வேண்டும் என்று முஸ்தீபுகள் செய்கின்றனர்.

"ஜெயிலிலே தள்ளுவார்கள்!"

"ஏன்? நியாயத்தைக் கேட்டால் தண்டிக்கும் ராஜாங்கமா இது?"

"நியாயமோ, அநியாயமோ! பாட்டன்மார் காலமுதல் இருந்துவரும் முறையைக் குறைகூறுவதற்கு விடுவார்களா?"

"ஜெயிலிலே தான் போடுவார்களா? சரி, செய்யட்டும். ஜெயிலிலே என்னென்ன கொடுமைகள் இருக்கும், அதையும் அனுபவிப்போம். மேலும், எங்களை ஜெயிலிலே போடுவதாக மிரட்டும் இந்த 'ஐயாமார்களெல்லாம்' கூட ஜெயிலிலே இருந்தவர்கள்தானே. ஜெயில்! நல்ல கல்லுக் கட்டிடம்! அங்கே ஏத்தம் இறைப்பு, பாத்திகடவு களைபறிப்பது, நீர்ப்பாய்ச்சுவது, வரப்பு கட்டுவது' வாய்க்கால் வெட்டுவது, ஆண்டை வீட்டுக்கு ஆன வேலைகளைச் செய்வது, அடிபடுவது, அடிமைப்படுவது என்ற



கொடுமைகள் கிடையாதல்லவா? ஜெயில் மேலான இடம். அனுப்பட்டும் தாராளமாக!"

மிட்டா, மிராசு, பண்ணை, ஜமீன் ஆகிய இடங்களிலே உள்ள "வாயில்லாப்பூச்சிகள்" இப்போது இவ்வண்ணம் பேசுகின்ற காட்சியைக் காண்கிறோம்.

இந்நிலையில் காங்கிரஸ் மந்திரி சபையினர், ஒருபுறம் நின்று ஜமீன்தாரி முறையை ஒழித்துவிடப் போகிறோம் என்று பேசுகின்றனர்; மற்றோர் புறமோ, விவசாயியின் கிளர்ச்சிகளை ஒடுக்கியே தீருவோம் என்று முழக்கமிடுகின்றனர். ஏழை பங்காளர் நாமே என்றும் பேசுகின்றனர்; ஏர் முனையிலே அமைதியை நிலைநாட்ட எமது முழு பலத்தையும் உபயோகித்தே தீருவோம் என்றும் கூறுகின்றனர். காங்கிரஸ் மந்திரிசபையினர் உரிமைக்காக, நாட்டுச் சுதந்திரத்திற்காகப் பாடுபட்டவர்கள் தாம். ஆனால் அந்தக் காங்கிரஸின் பலம் வளர்ந்து சர்க்காரை நடத்துமளவு செல்வாக்கு ஏற்பட்டவுடன், நிலப்பிரபுக்கள் அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். எனவே புதியதோர் சிக்கலைக் காங்கிரஸ் சமாளிக்கவேண்டி இருக்கிறது. காட்டு ராஜாக்களை எதிர்த்து நடத்தும் போராட்டம் இதுவரை நடத்திய போராட்டங்களைப் போன்றதல்ல.

வெள்ளையரோடு சண்டைபோடுவதிலே ஒரு மதிப்பு ஏற்படுகிறது! ஆண்டை வீட்டுப் பணக்காரனும், பக்கத்துவீட்டுப் புரோகிதனும் புகழ்கிறார்கள். தடியால் அடிக்கும் போலீசார்கூட தனி

யாகச் சந்திக்கும்போது, 'எல்லாம் சாண் வயத்துக் கொடுமைதான்' என்று கூறுவர். தண்டனை தரும் மாஜிஸ்ட்ரேட்கூட, 'தேசபக்தியை யாரும் பழித்துப் பேசக்கூடாது. ஆனால் சட்டம் சொல்கிறபடி நடக்கவேண்டியவன் நான்' என்று கூறுவார்—மன்னிப்பு கேட்டுக் கொள்ளும் பாவனையில். ஆனால் அதேபோது, கிராமத்தைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று எண்ணி, ஒரு கோவாப்ரேடிவ் சங்கம், அல்லது பஞ்சாயத்துபோர்டு, அல்லது ஜாதி பஞ்சாயத்து, அதுகூட வேண்டாம், ஒரு சின்ன பஜனைகோயில் இதன் நிர்வாகத்திலே தலையிட்டுப் பார்த்தால் தெரியும், என்னென்ன வகையான எதிர்ப்பு, எங்கெங்கிருந்து கிளம்புகிறது என்ற விஷயம். பாராட்டிப்பேச ஆளே இராது.

கிராமத்தலைவனை எதிர்த்தால் கரகோஷம் கிடையாது. பணக்காரனின் பகைமை கிளம்பும். புரோகிதன் சபிப்பான். கந்துக் கடைக்காரனும் கள்ளுக்கடைகாரனும் குருக்களும் ஒன்று கூடித் திட்டமிட்டு அடிஆளை ஏவுவர். ஊர்மக்களும், தங்களுக்காகப் பாடுபட வந்தவனென்று எண்ணி மாலையிட்டு வரவேற்க மாட்டார்கள். "இவன் யாரடா, எங்கக் கிராமத்துக்கு!" என்று பேசி ஏசுவார்கள். தொன்று தொட்டுள்ள அடிமைத் தளைகளை, அவர்கள் அழகிய ஆபரணங்களென்று, அறியாமையால் எண்ணிக் கொண்டுள்ளனர். எனவே கிராமத்தைச் சீர் திருத்துவது என்றால், அஞ்சாநெஞ்சமும், ஒழுக்கமும் வேண்டும். கெட்டபெயர் ஏற்படுமே என்பதில் கவலை



கொள்ளா மனப்பான்மை வேண்டும். எவ்வளவோ எடுத்துச்சொல்கிறோம், இந்த மக்கள், ஏனோ உண்மையை உணர மறுக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு உற்சாகத்தைக் குன்றவைக்க இடந்தரலாகாது. கிராமத்தான், ஆடுவெட்டிப் பொங்கலிட்டு, அர்ச்சுனனுக்குத் தவசுமரம் நாட்டி, அங்காளம்மனுக்குப் பூந்தேர் ஓட்டி, பதினெட்டாம் போர்கூத்தாடிக்கொண்டு இருப்பவன். மார்க்சைப் படித்துவிட்டு, புரட்சி வரலாற்றைத் தெரிந்து கொண்ட புத்தறிவாளனல்ல. பழைமையின் பிடியிலே இருப்பதுகூட அவனுக்குத் தெரியாது. அவன் தான் இருக்கும் நிலையே மேன்மையானது, தூய்மையானது, பட்டணத்து மக்கள் கெட்டுவிட்டவர்கள் என்று எண்ணி கிடக்கிறான். அப்படிப்பட்டவனிடம் பழகி, சீர்திருத்தம் செய்வதற்குத் தனிமையான பண்புகள் வேண்டும்.

பெரும்பாலும் இன்று கிராமச்சீர்திருத்தம் பற்றிய பேச்சு, நகர மேடைகளிலே, பேச்சலங்காரத்துக்காகக் கேட்கப்படுகின்றது. பலன், காணோம்.

விவசாயத்துக்கு ஏற்றதாக இருந்தும், தரிசாகப் போடப்பட்டிருக்கும் நிலத்தின் அளவு, இந்தியாவில், 11-கோடியே 4 இலட்சம் ஏக்கராகும். இதனால், நாட்டு வளமும்கெட்டு, வெளிநாட்டிலிருந்து உணவுப்பொருளை மக்கள் எதிர்பார்க்கும் நிலை இருந்துவருகிறது. தரிசாகக்கிடக்கும் நிலத்தைப் பயிரிடவேண்டிய திட்டத்துக்குப் பெரும் பொருள் செலவாகுமே, அதற்கென்ன செய்வது என்று அஞ்சுவது தான் சர்க்காரின் போக்காக இருக்

கிறது. இவ்வளவு ஏராளமான நிலத்தை தரிசாகப் போட்டுவைப்பது, நாட்டு மக்களுக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய உணவை, நாமே பறிக்கிறோம் என்று பொருள்.

ஐக்கிய மாகாணத்திலே, இப்போது, இத்தகைய தரிசுநிலங்களை விவசாயத்துக்குக் கொண்டு வரத் திட்டமிட்டிருக்கிறார்கள். அதற்கான துவக்க வேலையாக, ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

இந்த மாவட்டத்தில் ஐந்து இலட்சத்துச் சொச்சம் ஏகர் நிலம் தரிசாகக் கிடக்கிறது. இந்தத் தரிசு நிலங்களிலே, இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட ஏக்கர், காட்டுமிருகங்கள் உலவி, மலேரியா சூழ்ந்து, வெள்ளக்காடாகவோ அல்லது கள்ளிகாளான் நிறைந்த இடமாகவோ, உள்ளன. மற்றும்பல, ஏக்கர்கள் மாந்தோப்பாகவும் ஜமீன்தாரரின் கட்டைவெட்டும் இடமாகவும் உள்ளன. சில இடங்கள் நிலம், மட்ட ரகமான சத்துள்ளன. இவ்விதம், தரிசாகக்கிடக்கும் நிலத்தின் "ரகங்களை" ஆராய்ந்தறிந்து, எவ்வண்ணம் தரிசு நிலங்களை விவசாயத்துக்குக் கொண்டுவருவது என்பதற்கான முன்னேற்பாடுகளைச் செய்கிறார்கள்.

நமது மாகாணத்தில்

| மாவட்டம் | ஏக்கர் |
|---|---|
| செங்கற்பட்டு | 4609 |
| வடஆற்காடு | 42690 |
| தென் ஆற்காடு | 4292 |
| தஞ்சாவூர் | 17293 |



| | |
|---|---|
| திருச்சி | 11276 |
| மதுரை | 24390 |
| ராமநாதபுரம் | 2113 |
| திருநெல்வேலி | 4435 |
| கோவை | 72346 |
| சேலம் | 102916 |
| நீலகிரி | 40476 |

ஏக்கர் நிலம், தரிசாகக் கிடக்கின்றன என்று சட்டசபையிலே தெரிவித்தார்கள். ஆனல் இவைகளை விவசாய நிலமாக்க ஏதாவது திட்டம் உண்டா? இல்லை! உணவுப்பொருள் உற்பத்தி பெருகவேண்டும். இது ஊராள்வோரின் வேண்டுகோள். தரிசு நிலமாகப் பல ஆயிரம் ஏக்கர்களைப் போட்டு வைத்துவிட்டு, எங்கேயிருந்து உணவுப்பொருளைப் பெருக்குவது அதுபோலவே, நேரடியாக மேற்பார்வை செலுத்த முடியாத அளவு 'நிலபுலம்' வைத்துக் கொண்டுள்ள பெரியபண்ணைகளிலிருந்து, முழு உற்பத்திச்சக்தியை எப்படிப் பெற முடியும்? உழவனின் முதுகெலும்பை முறித்து, அவனிடம் ஏராளமாக வரி வாங்கி, ஒரு பகுதியைமட்டும் சர்க்காருக்குச் செலுத்திவிட்டு, பெரும்பகுதியைத் தமது "பிரபுத்வத்துக்கு"ச் செலவிடும் சுகபோகிகளான ஜமீன்தாரர்கள் இருக்கும்வரை, திருப்தியுடன் வாழ்வு நடாத்தும் உழவன் இருக்கமுடியாது. உழவனின் உள்ளத்திலே புயல் இருக்குமானல், வயலிலே வளம் காண முடியாது. எனவே நாட்டுப் பொது நலனைக் கவனித்தால் இந்த நிலப்பிரபுத்வ முறை, குட்டிராஜா முறை ஒழிக்கப்படவேண்டும்.

அப்போதுதான், உரிமைபெற்று உவகையுடன் உழவன் உழைப்பான்; வளம் பெருகும்; வாழ்வு மலரும். ஊராள்வோரின் கண்கள், இந்த ஏர் முனைப் பிரச்னையில் செல்லவேண்டும்; செல்வதென்றால், சட்டத்தை நிலைநாட்ட என்ற முறையிலே அல்ல; ஏர்முனை, போர்முனையாக மாருதபடி, கேடுகளைவோம், புதிய கணக்குப் போடுவோம் என்ற முறையில். நாடாள்வோருக்கு இந்த நற்கருத்து தோன்றுமா' விரைவில், விபரீத நிலைமை வளருமுன்?

உழவன் நிலை எங்கும் மகா மோசமாகத்தான் இருக்கிறது என்ற போதிலும், ஜமீன், மிட்டா, சுரோத்திரியம், இனும் என்று பல்வேறு பெயர்கள் வழங்கப்பட்டு, பரம்பரைப் பண்ணை முதலாளித்துவத்தை—காட்டு ராஜா முறையை—நிலைநாட்டும் அமைப்பாக உள்ள ஜமீன்களிலே உள்ள உழவர்களின் நிலைமை, உள்ளத்தை உருக்கக் கூடியதாக இருக்கும். எப்போதோ, எந்தக் காரணத்துக்காகவோ ஜமீன் தரப்பட்டு விட்டதால், இன்று பலர், காட்டுராஜாக்களாக வாழ முடிகிறது. இரட்டை ஆட்சி என்பார்கள் அரசியலில்—அதன் முழு உருவம், இங்குதான் நன்கு தெரியும். ஜமீன்தார், சர்க்காருக்கு வரிகட்டுவார்! ஜமீன்தார் குடிகளிடம் வரிவசூல் செய்வார். வசூலிப்பது அதிகம், சர்க்காருக்குச் செலுத்துவது குறைவு! இந்த இலாபவேட்டை மட்டுமல்ல! அமுலும் நடத்துவார். அவர் தான், அங்கு கண்கண்ட தெய்வம்! அவருடைய பேச்சே சட்டம்,



சர்க்கார், அவருடைய மாளிகைத் தாழ்வாரத்திலே தான் தவழ்ந்துகொண்டிருக்கும். விளைகிறதோ இல்லையோ, வரிகட்டித் தீரவேண்டும்! ஏரி உடைப்பு—"கிடக்கு நீ சரிப்படுத்து!" என்றுதான் சொல்லுவார்! தவறு செய்துவிட்டேன்—சொல்லமாட்டார், சொல்லி அனுப்புவார். மழை இல்லை—மாரிக்குப் பூஜைபோடு! வரிமட்டும் கட்டத் தவருதே! பக்கத்து வட்டாரத்திலே, அயன் நிலம்—ஜமீன் ஆட்சிக்கு உட்படாதது இருக்கும். அதற்கு உள்ள தீர்வை, ஜமீன் வரியை விடக் குறைவு! ஏன்? கேட்கப்படாது!!

இன்னின்ன, ஜமீன், இவ்வளவு இவ்வளவு கட்ட வேண்டும் என்று சர்க்கார் முன்பு குறித்தனர்—அந்தக் கோடு தாண்டாமல், அதே தொகையைத் தந்துவருகிருர்கள், சர்க்காருக்கு. ஆனல் அதேபோது, ஜமீன் குடிகளிடமிருந்து வசூலிக்கும் தொகை இருக்கிறதே, அதைமட்டும் அதிகமாக்கிவிட்டார்கள். ரிப்பேர்செய்வது, ஏரிகுளம் குட்டைகளைச் செப்பனிடுவது இவைகளை, ஜமீன்தார் கவனித்துக் கொள்வார் என்று சட்டம் சொல்கிறது. ஆனல் அவர் அவைகளைச் செய்யமாட்டார்—வற்புறுத்தும் வல்லமை ஜமீன் உழவர்களுக்குக் கிடையாது—இருந்தால் ஏன் பாபம், அவர்களின் வாழ்வு இருண்டுவிடுகிறது!

காங்கிரஸ் மந்திரிமார்கள், 'நல்வாக்கு' கொடுத்து வரும் குடுகுடுப்பைபோல, 'ஜமீன் ஒழியுது! ஜமீன் ஒழியுது! சுகம்பிறக்கப்போகுது.

சுகமா இருக்கப்போறிங்க' என்று கூறுகிறார்கள்-- திட்டம் தீட்டியபாடில்லை.

ஜெமீன் முறையின் கேடுகளைப் பற்றி, இனி மேல் ஆராயவேண்டிய-விசாரணை நடத்தவேண்டிய-அவசியம் இல்லை. காலத்தைக் கடத்தவேண்டுமென்ற எண்ணத்துடன், சிலர், அதுபோன்ற யோசனை கூறுவர்.

ஆச்சாரியார் ஆண்ட காலத்திலேயே, ஜமீன் முறையின் சீர்கேடுகளை, ஒரு கமிட்டி, விசாரித்து, பெரியதோர் அறிக்கை தயாரித்தது. பல இடங்களைப் பார்வையிட்டு, பலருடைய வாக்கு மூலங்களைத் திரட்டி, மேஜை தாங்கமுடியாத அளவு, புத்தகங்களாக்கி உள்ளனர். ஜமீன் முறை பற்றிய சகல விஷயத்தையும் திரட்டி.

அந்த ஏடுகளைப் பார்த்தால் போதும். ஜமீன் 'ஐயாமார்கள்' செய்யும் வேடிக்கை நன்கு விளங்கிவிடும். பலருடைய குட்டு வெளிப்பட்டுவிடும். அந்த ஏடுகளின் மூலம், நாம், அந்த ஓவியங்களில் சிலவற்றைத் தீட்டிக் காட்டுவது முக்கியம் என்று கருதுகிறோம்—கிராமம் சீரழியும் காரணமும், விவசாயம் வதைபடும் காரணமும், மக்களுக்குப் புரியவேண்டும் என்பதற்காக.

எந்த உழவரிடமிருந்து வரிபெற்று, அதிலே ஒரு பகுதி மட்டுமே சர்க்காருக்குச் செலுத்திவிட்டு, மிகுதியை இந்த ஜெமீன்தாரர்கள் எடுத்துக்கொள்கின்றனரோ, அந்த உழவனை, அவர்கள் நடத்தும்



முறை, அறிவுக்குப் பொருத்தமானதுமல்ல, அன்பு நெறியுமல்ல—அகப்பட்டதைச் சுருட்டி, ஆளடிமை கொள்ளும் முறையேதான்! பெரிய பெரிய ஜமீன்கள், பித்தாபுரம், பொப்பிலி, சிவகெங்கை இப்படிப்பட்டவைகளிலே மட்டுமல்ல, குட்டி ஜமீன்களிலும், கண்மூடித்தர்பார் உண்டு—கைகட்டி வாய்பொத்திச் சேவகம் செய்து தீரவேண்டியவர்கள் உழவர்கள்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்.

என்ற கீதம் அறியாதவரல்ல, தோழர் முத்துரங்க முதலியார்! இதோ, அவர் — ஜமீன் உருவில்— பாருங்கள்! தேசீயம், ஜனநாயகம், ஏழைகளிடம் காட்டும் அன்பு, இவைகளின் மேடை உருவத்துக்கும், நடவடிக்கையின் உருவத்துக்கும் உள்ள வித்தியாசம் பளிச்செனத் தெரியும். ஆலத்தூர் கிராமம் நடேச ரெட்டியார் என்பவர் பேசுகிறார் — எதிரே ஜமீன் முறை பற்றிய விசாரணை நடத்தும் கமிட்டி மெம்பர்கள் உள்ளனர். சில திங்கள் விவசாய மந்திரியாக இருந்த தோழர் குமாரசாமி ராஜா இதிலே ஒரு மெம்பர்; மாஜி முதலமைச்சர் வேலை பார்த்த பிரகாசம்காருதான் கமிட்டித் தலைவர். தோழர் நடேச ரெட்டியார், ஜமீன் குடி! ஜமீன்தார் காங்கிரஸ் தலைவர், தோழர் முத்துரங்க முதலியார்தான். ஜமீன் அளவு, சிறியதுதான் தன்மை? நீங்களே தெரிந்து கொள்வீர்கள், ஜமீன் குடியானவர் பேசக்கேட்ட பிறகு. இதோ பேசுகிறார் கேளுங்கள்.

இடம்:—சென்னை: காலம் 1938, ஏப்ரல் 27.

நடேச ரெட்டியார்:— முத்துரங்க முதலியார் கிராமம். அது ஏரிக்கரை. ரொம்ப நாளாகப் பாழாகக் கிடக்கிறது; தண்ணீர் நிற்கிறதில்லை. கலங்குகள் கல்லால் கட்டுவதில்லை; நாளுக்கு நாள் ஏரி உள்வாய்காரர் அதைப் புதைத்து ரொம்பப் பள்ளமாய்விட்டது. ஏரி, பள்ளமாய்ப் போய் விட்டது.

குமாரசாமி ராஜா:—ரொம்பப் பள்ளமாய்ப் போனால் ரொம்ப தண்ணீர் கட்டுமே.

நடே:—தண்ணீர் போகிற இடம் ரொம்ப பள்ளமாகப் போச்சு. மண்போடுவதில்லை. நேரே கொண்டு போய்க் காட்டினேம். ஜமீன்தாரர், முத்துரங்கமுதலியார். காங்கிரஸ் முத்துரங்கமுதலியார். மழைகாலத்தில் தண்ணீர் பாய்ச்ச வேண்டுமானால் மழைபெய்தால் அடித்துக்கொண்டு போய் விடுகிறது. அவரிடம் சொன்னால் ஓட்டுக்கு வந்தார். (எப்பொழுதும் வருகிறதில்லை.) இந்த மாதிரியாக இருக்கிறது உங்கள் கிராமம் என்று காட்டினேம். அதற்கு, ஏப்ரல் மாதம் வருகிறேன், அதைப் பார்த்துச் சீர்திருத்தம் பண்ணுகிறேன் என்று சொன்னர். மறுபடியும் வரவில்லை.

தலைவர்:—இதுதானே ஏப்ரல் மாதம்.

நடே:—போனவருஷம் ஏப்ரல் மாதம் வருகிறேன் என்று சொன்னர். அப்புறம் வரவேயில்லை. அவர் சொந்தக் கிராமம், பட்டா இருக்கு, தீர்வை



தான் காணிக்கு 10½ ரூபாய் முதற்கொண்டு இருக்கிறது. ஜாஸ்தியாக இருக்கிறது. ஏரியைப் பார்ப்பதில்லை அவர். தை மாசம் இறைச்சோம். கலெக்டரிடம் மனுகொடுத்தோம். ரிப்பேர் பண்ண வேண்டுமென்று கொடுத்திருக்கிறோம். மனுவுக்குக் கேள்வி வரவில்லை. விசாரித்தார் தாசில்தார். சி. என். ஏலப்பமுதலியார், முத்துரங்க முதலியார் தமையன். அவர் இருக்கிறார். கிராமம் எல்லாம் அவர்தான் பார்க்கிறார்.

A. ரங்கசாமி ஐயங்கார்:—மானேஜ்மெண்ட் பண்ணுவது யார்?

நடே:—இரண்டுபேரும் பண்ணுகிறார்கள். அவர் பண்ணுகிறது இவர் பண்ணுகிறது என்று சொல்ல முடியாது. வரவுகால், ஏரிக்கு அவர்களே கால்வாய் வெட்டி ஜலம் பாய்ச்சவேண்டும். அது பத்து வருஷமாகப் பண்ணுவதே இல்லை. அது ரொம்பக் கெட்டுப்போய், வரவுகால் கிடையாது. இந்தமாதிரி இருக்கிறது

A. ரங்கசாமி:—நீங்கள் பண்ணுவதுதானே.

நடே:—மாமூல் அந்த இடத்திலிருந்து கண்வாய் கட்டி எடுத்துவரவேண்டும். அங்கே போனல் சிலர், அங்கிருந்து மண் எடுக்கக்கூடாதென்று அடுத்த கிராமக்காரர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள்.

A. ரங்கசாமி:—அடுத்த கிராமத்தில் உள்ளவர்கள் ரிப்பேர் பண்ணினல் ஆக்ஷேபிக்கிறார்களா?

நடே :—ஆமாம்! ஜமீன்தார் வருவதில்லை. பெரிய கிராமம். நாங்கள் போனால் மண் எடுக்கக் கூடாதென்று சொல்லுகிறார்கள். நாங்கள் வந்து விடுகிறோம். ஏரிக்கு வரவு இல்லை. கல் கட்டாத தால் உள்வாய்ப் பயிர்காரர்கள் அடைத்து விடுகிறார்கள். ஏரி கலங்கல்கள் மண்ணால் இருக்கிறது. அதில் பயிர் பண்ணுகிறார்கள் ஏரிக்குள் அசல் கிராமக்காரர்கள். கசிவாய் இருக்கு தண்ணீர், ரொம்ப போகாமல் வெட்டிவிடுகிறார்கள். கிராமம் பாக்கம் புலியூர். அவர்களுக்குச் சொந்தமில்லை. அசல் கிராமத்துக்காரன் அக்கிரமம் பண்ணுகிறான். அவர் ஏதாவது கட்டி வைத்தால் மற்றவர்கள் ஒன்றும் செய்யமுடியாது. நீங்கள் கட்டுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். வெகு நாளாக அவர்கள் வந்து பார்ப்பதே கிடையாது. கிராமத்துக்கு வசூலுக்கு குமாஸ்தாக்கள் வருகிறார்கள். அவர்களுக்குச் சுமார் 2500 ரூபாய் வரும்; எல்லாம் நன்செயும் புன்செயும் இருக்கு. ஏக்கருக்கு ரூபா 10½ முதற்கொண்டு இருக்கிறது. நஞ்சைக்கு ஏகருக்கு ரூபா 10½ முதற்கொண்டு ஒருவராகன் வரையிலிருக்கிறது. ஜாஸ்தி ரூபா 10½; குறைச்சல் ரூபா 3½. அவர்களுக்கு அயன் கிஸ்தி கவர்மெண்டுக்கு கட்டுவது ரூபா 500 இருக்கிறது.

குமா :—புஞ்சைக்கு எவ்வளவு தீர்வை?

நடே :—ரூபா 2 முதல் ஒரு ரூபா வரையிலிருக்கிறது.

குமா :—புஞ்சையில் என்ன விளையும்?



நடே :—மழைபெய்தால், அவிரி, உளுத்தம் செடி விதைப்பது.

குமா :—சமீபத்தில் உயர்த்தியிருக்கிறார்களா?

நடே :—இந்தத் தீர்வை ரொம்ப நாளாக இருக்கிறது. முதலில் வாரப்பட்டாவாக இருக்கிறது. சுமார் 40 வருஷத்துக்குமுன், கண்டதில் பேர்பாதியாக் இருந்தது. இப்பொழுது கொஞ்சம் கொஞ்சமாகத் தீர்வையாக்கி, ரொக்கத் தீர்வையாக்கி விட்டார்கள். ஏறக்குறைய 40 வருஷமாக்கி விட்டார்கள், ரொக்கத் தீர்வையாக. ரொம்ப நாளாக அவர்கள் தான் சொந்தக்காரர்கள். பரம்பரையாக அவர்களிடமே இருந்து வந்திருக்கிறது.

குமா : எத்தனை கிராமம்?

நடே :—எங்கள் ஊர் ஒன்றுதான். அதனால் ஏழைக் குடிகள் சரியாக ஜலாதாரமில்லாததால் சாவியாக்கிக் கொண்டு சொந்த தண்ணீரால் இறைச்சிக் கொண்டிருக்கிறார்கள்.

எ. ரங்க :—குடிகள்மேல் வரிவசூல் பண்ணுவதற்காகக் கேஸ் போட்டிருக்கிறார்களா?

நடே :—கேஸ் போட்டு, ஏலத்தில் எடுத்திருக்கிறார்கள்.

எ. ரங்கசாமி ஐயங்கார் :—உங்கள்பேரில் போட்டிருக்கிறார்களா?

நடே :—போட்டிருக்கிறார்கள்.

எ. ரங்கசாமி ஐயங்கார் :—டிமாண்டு இருக்கிறதா?

நடே :—பாக்கி கட்டிவிட்டேன்.

எ. ரங்கசாமி ஐயங்கார் :—எவ்வளவு பாக்கி கட்டினீர்கள் ?

நடே :—ஒரு 20 ரூபாய் கட்ட வேண்டி இருந்தது. கட்டியாச்சு. இப்பொழுது பாக்கியில்லை. 46 பசலிக்குக் கட்டவேண்டும்.

குமாரசாமி ராஜா :—உங்களுக்கு எத்தனை எகர் இருக்கிறது ?

நடே .—10 எக்கர் நஞ்சைதான். மொத்தம் தீர்வை ரூபா 50 கொடுக்கிறேன். 9 எக்கருக்கு ரூபா 50 கொடுக்கிறேன்.

எ. ரங்கசாமி ஐயங்கார் :—கண்வாய் பள்ளத்தைத் தூக்க வேண்டும் ?

நடே :—ஆமாம். கலங்கல் கட்டவேண்டும். தாங்கலுக்கு அடியோடு மண் போடுவதே இல்லை. அது எக்காலமும் பள்ளம். சின்ன ஏரி இருப்பதால் தாங்கல் மண் போடுவதே யில்லை. அதைக் கவனிப்பதில்லை.

ஐயங்கார் :—நீங்கள் மனுப்போட்டீர்களா ?

நடே :—பெட்டிஷன் எழுதிப்போட்டோம்.

ஐயங்கார் :— கலெக்டருக்கு மனுகொடுத்தீர்களா ?



நடே :—போட்டிருக்கிறோம்.

நாராயணசாமி நாயுடு:—என்ன ஆச்சு, கலெக்டர் மனு ?

நடே :—தாசில்தார் சடகோப ஐயங்கார், கூப்பிட்டுக் கேட்டார். நாங்கள் சொன்னோம். அவர்களையும் கூப்பிட்டுக் கேட்டார்கள். ஏல்லாம் செய்கிறோம், கலங்கல் கட்டுகிறோம் என்று சொன்னார்கள்.

தலைவர் :—யார் ?

நடே :—அவர்கள் குமாஸ்தா—கிருஷ்ணமாச்சாரியார். கலெக்டர் மனு காபி இல்லை.

நாயுடு :—நாளைக்குக் கொண்டுவந்து கொடு.

மிர்சாபூர் ஜமீன்தார் :—ஜமீன்தார் யார் ?

நடே :—முத்துரங்க முதலியார், ஏவலப்ப முதலியார். முத்துரங்க முதலியார் பட்டாவில் அவர் தமையன் ஏவலப்ப முதலியார் பேர் இருக்கிறது.

குமாரசாமி ராஜா:—மீர்சாபூருக்காக — என்ன கஷ்டம் என்று கேட்கிறார்.

நடே:—தண்ணீர் இல்லையே சாமி! மிர்சாபூர் :—ஏரி ரிபேர் இல்லாததால் கஷ்டமா ?

நடே :—வருகிற இடமும் ரிபேர் இல்லை போகிற இடமும் ரிபேர் இல்லை.

மிர்சாபூர் :— ஜமீன்தாருக்குத் தெரிவித்தீர்களா ?

நடே :—எல்லாம் குமாஸ்தாவை அனுப்புகிறோம் என்று சொன்னார்கள்.

மிர்சாபூர் :—நீங்கள் நேரில் போய்ப் பார்த்தீர்களா?

நடே :—எல்லாம் கிருஷ்ணமாச்சாரியாரை அனுப்புகிறோம்; அவர் பார்ப்பார், செய்வார் என்று சொன்னார்கள்.

மிர்சாபூர் :—இந்தக் கிராமத்தில் என்ன வரும்படி இருக்கிறது அவர்களுக்கு?

நடே :—ரூபா சுமார் 2,500 வருகிறது ஏறக்குறைய.

மிர்சாபூர் :—எப்பொழுதாவது ரிபேர் பண்ணிக் கொஞ்சமாவது செலவு பண்ணி யிருக்கிறார்களா ?

நடே :—2, 3 வருஷத்திற்கு ஒருதரம் ரூபா 50, 40 போடுவது. அது கரைந்து போகும். காங்கிரஸ் ஐயன்மார்களைக் கொண்டு காட்டினோம். அவர்கள் பார்த்தார்கள். பாக்கம் துரைசாமி ஐயங்கார் அவர்களுக்கும் காட்டினோம். அவர்களைச் சிபார்சு பண்ணச் சொன்னோம். அவர் கூட இங்கு வந்திருக்கிறார். அக்கம் பக்கம் கிராமங்களைப்போல் எல்லாம் கிடைக்குமென்று நினைத்தோம்.



குமாரசாமி ராஜா :—இதெல்லாம் கட்ட என்ன செலவாகும்.

நடே :—ரூபா 1000, 1500 ஆகும்.

மிர்சாபூர் :—தீர்வை ஜாஸ்தியா ?

நடே :—ஜாஸ்திதான். காஞ்சாலும் தீஞ்சாலும் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.

குமாரசாமி ராஜா :—அக்கம் பக்கம் அயன் பூமி எப்படி ?

நடே :—தீர்வை தெரியாது.

குமாரசாமி ராஜா :—சுற்றிவர அயன் பூமிதானே?

நடே :—2 கிராமம் அயன் பூமி. 2 கிராமம் சுரோத்ரிய பூமி.

கு. ராஜா :—இதெல்லாம் எவ்வளவு தீர்வை ?

நடே :—எங்கள் நிலத்துக்குக் குறைந்த தீர்வைதான்.

மிர்சா :—மூன் வாரப் பட்டாவாக இருக்கும் போது பேர் பாதியாகத்தானே பிரித்துக்கொண்டிருந்தீர்கள் ?

நடே :—ஆமாம்.

மிர்சா :—தீர்வை ஜாஸ்தி என்பதைப் பற்றி எப்பொழுதாவது தாவா பண்ணினதுண்டா ?

நடே :—வியாஜ்யம் பண்ணினேம் 10-வருஷத்திற்கு முன். அதற்குப் பிறகு 2-கோர்ட்டில் எங்களுக்கு ஜெயமாச்சு, மூன்ருவது கோர்ட்டில் அவர்களுக்கு ஜெயமாச்சு.

குமா :—ஜட்ஜிமெண்ட் நகல் இருக்கா ?

நடே :—30-வருஷத்திற்கு முன் தீர்மானமாகிவிட்டதே. ஏகருக்கு காஞ்சாலும் தீஞ்சாலும் என்று. பெரியபட்டாதார் இருந்தார். அவர்மூலமாக அப்போது வியாஜ்யம் போட்டோம். கதிகிடைக்கவில்லை. மாடு மேயப் புறம்போக்கு கிடையாது. ஏரி உள்வாயிலும் வெளியிலும், யார் எதைமடக்கினலும் பட்டாபோட்டு கொடுத்து விடுகிருர்களே.

நாயுடு :—ஏரி உள்வாயில் பட்டாபோட்டு கொடுத்தார்களா ?

நடே :—எந்தக் கிராமத்திலும் தொடுக்கிருர்கள். கொடுத்திருக்கிருர்கள் சுமார் 200 காணி இருக்கும்.

ஐயங் :—பக்கத்துக் கிராமத்தில் தானே கொடுத்தார்கள்,

நடே :—இந்தக் கிராமத்திலும் கொடுத்தார்கள். இதை பட்டா செய்துகொண்டு சில ஆள்களுக்கு விற்றுவிட்டார்கள். பக்தவத்சல முதலியார் பேரில் எல்லாம் இருக்கிறது.



நாயுடு :—இந்த விற்றநிலத்தில் இவர்கள் பட்டா வைத்திருக்கிருர்களா ?

நடே :—ஆமாம்.

ஐயங் :—பட்டா யார் பேருக்கு இருக்கிறது.

நடே :—அவர் பேருக்குப் போட்டிருக்கிருர்கள்.

ஐயங் :—ஏரிக்குள் வாயில் வெளியில் ஏலத்தில் எடுத்த நிலங்கள் கூட அவர் பேருக்கு பட்டா போட்டுவைத் திருக்கிருர்களா ?

நடே :— அவர்கள் சொந்தப்பயிரிடுகிருர்கள் குமஸ்தாவை வைத்து. சிலதை விற்று விட்டார்கள்.

நாயுடு :—வரிகொடுக்க முடியாமல் ஏலத்தில் விட்டிருக்கிருர்கள் ?

வெங்கடாசலம் பிள்ளை :—ஏலத்தில் எல்லோரும் எடுப்பது போல இவர்களும் எடுத்திருக்கிருர்கள்.

நடே :—ஆமாம்.

பிள்ளை :—வெளி ஆள்கள் எடுத்திருக்கிருர்கள், இல்லையா ?

நடே :—வெளி ஆள்கள் எடுக்கவில்லை. யாரும் ரொம்பக் காணேம். எனக்குச் சொல்லுவதற்கே யாரும் தென்படவில்லை. போனவருஷம் ஏலமென்று போட்டு அவர்களே எடுத்துக்கொண்டிருக்கிருர்கள்.

ஐயங்:—வேறு ஒருவரும் வாங்கமாட்டார்கள்.

உள்ளூர் ஆள்கள் வாங்கமாட்டார்கள். அவர்கள் தானே எடுத்துக்கொள்ளவேண்டும்.

நடே:—ஆமாம். அசல் ஊர்காரன் கிரயத்துக்கு கேட்டால் விற்றுவிடுகிறார்கள்.

நாயுடு:—எத்தனை காணி இருக்கு.

நடே:—20 காணி இருக்கிறது அவர்பேரில்–முத்துரங்க முதலியார் பேரில்.

மிர்சா:—குடியானவர்கள் போய் கேட்டால் பட்டாபோட்டு கொடுப்பார்களா, ஏலத்தில் எடுத்த நிலத்தில்?

நடே:—செலவு, போக்குவரத்து எல்லாம் கொடுத்தால் கொடுப்பார்கள். ஒருவருஷத்திற்கு ஏறக்குறையக் கொடுத்தால் கொடுப்பாரகள். நாள் பட்டுப்போனதைக் கொடுக்கமாட்டார்கள் கிரயத்துக்கு விற்று விடுவார்கள். 200 300 ரூபாய் காணிக்கு; நல்ல நிலமாக இருந்தால்.

ஐயங்:—யார் வாங்குகிறார்கள்?

நடே:—அக்கம் பக்கம் கிராமத்தில் பணமுள்ளவர்கள் வந்து வாங்குகிறார்கள்.

மிர்சா:—தீர்வை போடமாட்டேன் என்கிறார்கள். ஏலத்தில் விடுகிறார்கள். சம்சாரிகள் கேட்பதில்லை. என்ன பண்ணுவது?



நடே:—கொடுக்கச் சக்தி இருந்தால் நாங்கள் ஏன் ஏலத்தில் விடப்போகிறோம்.

மிர்சா:—அவர்கள் எடுத்துக்கொள்கிறார்கள் என்கிறீர்களே, வேறு என்ன செய்வது?

நடே:—பொறுமையாகச் சொல்லவில்லை. எடுக்கிறார்கள் என்று சொல்லுகிறோம். சக்தியில்லாமல் நாங்கள் விட்டுவிடுகிறோம். மாட்டைப்பிடித்து கவலை ஓட்டிட வேண்டும் என்றால் மற்ற கடன்களை கொடுப்பதெல்லாம் ரொம்ப கஷ்டமாக இருக்கிறது.

ஐயங்:—அவர்களுக்குப் பணம் எங்கே?

நடே:—அக்கம் பக்கம் பணமுள்ள கிராமங்கள் இருக்கின்றன. குடிகள் சுபீக்ஷமாக இருக்கிறார்கள். இரண்டுபோகமும் விளைந்து தண்ணீர் மீதியாகும்—நாங்கள் தைமாதம் யாசனம் பண்ணுகிறோம். அக்கம் பக்கத்து ஊராருக்கு பாதியிருக்கிறது ஏரிக்கரை.

நா:—நிலங்களில் தண்ணீர் நன்றாக இருக்கு?

நடே:—ஆமாம்.

மிர்சா:—அதற்கு பக்கத்தில் வேறு ஜமீன் கிராமங்கள் இருக்கா?

நடே:—பாக்கம், இருக்கு. முதலியார் ஒருவர். அவர் பேர்தெரியாது; ஒரு நாயுடுவுக்கு இருக்கு.

மிர்சா:—இந்தக் கிராமங்களில் உள்ள ரயத்துகள் ரொம்ப சௌகரியமாக இருக்கிறார்களா?

நடே :—நீங்களே வந்து பாருங்கள். நல்லா இருக்கிறார்கள். அவர்கள்தான் எங்கள் நிலங்களை வாங்குகிறார்கள்.

நாயுடு :—அங்கு ஏரி நேராக இருக்கிறது. தண்ணீர் சரியாக இருக்கும்.

நடே :—பூராவும் விளைந்து மீறும். 4 பக்கமும் இருக்கிற ஊரும் விளைந்து மீறும்.

இதுவரை ஜமீன் குடியானவர்; ஜமீன்தார் ஓவியம் தீட்டியதைக் கண்டீர்கள்.

ஏரி மராமத்துச் செய்யாத முத்துரங்கம் எங்கே, 'ஏக இந்தியவை'யே மராமத்து செய்யும். மகத்தான சேவை செய்யும் முத்துரங்கம் எங்கே! வருவதே இல்லை—குறையைக் கவனிப்பதே இல்லை—மராமத்து செய்வதே இல்லை—வரி வாங்கத் தவறுவதில்லை—தவறினவர்கள் மீது வழக்கு தொடுத்து, ஏலம் எடுக்கத் தவறுவதில்லை!! எப்படி இருக்கிறார் இந்த முத்துரங்க முதலியார்? நீங்கள் வழக்கமாகக் காணும் முத்துரங்கனாரா!! காஞ்சாறும் தீஞ்சாறும் வரிதான்!—இது தான் முறை! ஜெமீன் கிராமத்தில். இந்த அமுல் நடத்துபவர்தான், ஏழைகளிடம் அன்பைச் சொன் மாரியாகச் சொட்ட வைக்கிறார் மேடையில். கதியில்லை என்று கதறுகிறான் ஜமீன் குடியானவன்! தன் ஜமீன் குடியானவனின் அழுகுரலைக் கேட்டும் ஆறுதல்தர முன் வராதவர், பாரதமாதாவின் புலம்பலைக் கேட்டுத் துடிக்கிறாராம், நெருப்பில் வீழ்ந்த புழுப் போல!!



ஐயர் வருவார் - கவனிப்பார்-செய்வார்!—இது தான் பதிலாம், கைகட்டி, கண் பிசைந்து நிற்கும் குடியானவன் கோரிக்கைக்கு! மாடுமேய இடம் இல்லை! ஏரிக்கு நீர் வர வழியில்லை! கலங்கல் போடக் கல் இல்லை! ஏக்கருக்கு 10½ கூட வாங்குவதிலே என்னமோ குறைவில்லை!!

குடியானவர்கள் தருவது 2500 ரூபாய்! சர்க்காருக்கு ஜெமீன்தார் தருவது 500 ரூபாய். மிகுதி 2000? பாரத் மாத்தாக்கி ஜே!!

பக்கத்து ஊர் பச்சென்று இருக்க, அங்குள்ள குடியானவர்கள் சுகப்பட, இங்கு 'தேசபக்தரின்; திருத்தலத்திலே, உள்ள குடியானவர் நிலை, காஞ்சாறும் தீஞ்சாறும் கட்ட வேண்டியதைக் கட்டுவது, என்று இருக்கிறது.

காங்கிரஸ் ஐயன்மார்களைக் கொண்டு கூடச் சிபார்சு செய்யச் சொன்னார்களாம்! ஜமீன் குடி, இதைக் கூறுகிறார்—ஆழப்பதிந்துள்ள சோகத்தைக் கவனியுங்கள்—ஐயர்கள் சொன்னால் ஐயா கவனிப்பார் என்று சூட்சமம் தெரிந்த, வேடிக்கையையும் கவனியுங்கள்.

ஜமீனில், மிகச்சிறியது இது—ஆனால் மிகப் பெரியதிலே என்ன முறை இருக்குமோ, அது இங்கு இருக்கக் காண்கிறோம். ஜமீன் : சிறியது! ஜெமீன்தாரரோ, சௌரிய பெரிய ஜமீன்தாரர்களை விடப் பிரபல்யமானவர்! உள்ளமோ......உழவர் படம் பிடித்துத்தான் காட்டி விட்டாரே!

ஊரார் முன் உலவிப்பேசும் முத்துரங்க முதலியாருக்கும்- ஊருக்கு ராஜாவாக இருந்து கொண்டு வாழும் முத்துரங்கனருக்கும் இடையே உள்ள வித்யாசத்தைக் கவனியுங்கள்.

'இட்டுக்கட்டியது' என்று யாராவது சொல்லக் கூடுமோ என்ற சந்தேகத்தாலேயேதான், ஜெமீன் குடியானவரின், கொச்சைத் தமிழைத் திருத்தாமல் கூட வெளியிட்டிருக்கிறோம். இலக்கணம் சரியில்லை —கிடக்கட்டும்! ஜமீன் முறையின் இலட்சணம், அதை நடத்தும் தேசீயத் தலைவரின் இலட்சணம் எப்படி இருக்கிறது என்பதைக் கவனியுங்கள். ஒரு நீண்ட பெருமூச்சு பிறக்கும், காங்கிரஸ் நண்பர்களுக்கு. ஏர் முனையிலே காணப்படும் வேறு பல எழிலுடையவர்களின் ஓவியங்களை இது ஒரு சிறு சித்திரம்—சீரழிவு பட்டுக்கிடக்கும் ஜமீன் முறையைக் காட்ட.

### ஜமீன்தார் தர்பார்

பொதுவாக இந்தியாவின் நிலங்களை ஜமீன்தாரி, ரயத்வாரி என்ற இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

வங்காளம், பீஹார், ஐக்கிய மாகாணம், வட சென்னை (சென்னையில் 3-ல் ஒரு பாகம்) ஆகியவைகள்தான் பெரும்பாலும் ஜமீன்தாரிப் பிரதேசங்களாக இருக்கின்றன. இந்த நிலங்களுக்குச் செலுத்தவேண்டிய சர்க்கார் கிஸ்திகளுக்கு ஜவாப்தாரிகளானவர்கள் ஜமீன்தாரர்களே. இந்த ஜமீன்தாரர்கள் நிலங்களை குத்தகைக்கு விட்டு



அதனால் வரி வசூல் செய்து (நிலம் தங்களுக்குச் சொந்தமென்பதினால்) தாங்கள் பெரும்பாகத்தை எடுத்துக்கொண்டு, கொஞ்சத்தையே சர்க்காருக்குக் கிஸ்தியாகச் செலுத்துகிறார்கள். இதனால் சர்க்காருக்கும் நிலத்தில் சாகுபடி செய்கிற விவசாயிக்கும் இதுவரை எந்தவிதச் சம்பந்தமுமில்லை.

முற்சொன்ன இடங்களைத் தவிர இந்தியாவின் மற்ற பாகங்களில், ரயத்வாரி பிரதேசங்களே அதிகம். இங்கு நிலவரி, சர்க்காரால் ஒவ்வொருவருக்கும் நேரே விதிக்கப்பட்டு, வசூலிக்கப்படுகிறது. நிலங்கள் சாகுபடிக் காரர்களுக்கு சொந்தம்.

இந்தியாவில் ஜமீன்தாரி முறையானது, பிரிட்டிஷாரால் (1786–93) சிருஷ்டிக்கப் பட்டதாகும். முகலாய மன்னர்கள் காலத்தில் சம்பளம் பெற்ற நிலவரி வசூல்காரர்களாக இருந்தவர்கள், பின்னர் பிரிட்டிஷ்காரர்களுக்கு வருடா வருடம் இவ்வளவு கிஸ்தி செலுத்துவது என்ற முறையில் ஒப்பந்தக் காரர்களானார்கள். பிரிட்டிஷ்காரர்கள் பர்மனென்ட் செட்டில்மெண்ட் என்னும் பரம்பரைத் திட்டத்தை ஏற்படுத்தி, கிராமங்களையும், ஊர்களையும் ஏலத்தில் விட்டும், தங்களுக்கு உதவிபுரிவதற்கும் தங்களைக் காப்பாற்றுவதற்கும் ஒப்பந்தம் பேசி, அநேக கிராமங்களையும், நாடுகளையும் வெகுமதி கொடுத்தும் நம் நாட்டில் அநேக ஜமீன்தார்களைச் சிருஷ்டித்தார்கள். இத்தகைய ஜமீன்தாரர்கள் சர்க்காருக்குச் செலுத்தவேண்டிய பேஷ்குஷ் சதாகாலத்தும் ஸ்திரமாக்கப்பட்டுவிட்டதால், இவர்கள் தான்தோன்றித் தம்பிரான்களானார்கள்.

இந்தியாவில் ஜமீன் குடிகளிடமிருந்து 18 கோடி ரூபாயை ஜமீன்தார்கள் வசூல்செய்து 3 கோடி ரூபாயைச் சர்க்காருக்குப் பேஷ்குஷாகச் செலுத்திவிட்டுப் பாக்கி 15 கோடி ரூபாயைத் தாங்களே அனுபவிக்கிறார்கள். நமது சென்னை மாகாணத்தில்மட்டும் ஜமீன் குடிகளிடமிருந்து 2½ கோடி ரூபாயை சுமார் 11 பெரிய ஜமீன்தார்கள் வசூல் செய்து ½-கோடி ரூபாயை சர்க்காருக்குப் பேஷ்குஷாகச் செலுத்திவிட்டு, 2 கோடி ரூபாய்களைத் தாங்களே அனுபவிக்கிறார்கள். சென்னை மாகாணத்தில் மொத்தம் 1500 ஜமீன்தாரர்கள் இருக்கிறார்கள்.

சென்னை மாகாணத்தில் ரயத்வாரி விஸ்தீரணம் 62,518,786 ஏக்கராக்கள். சாகுபடியாகும் நில விஸ்தீரணம் 25,566,671 ஏக்கராக்கள். இவைகளிலிருந்து அரசாங்கத்திற்கு வருட வரும்படி ரூ. 6,47,19,451. ஜமீன்தாரி நில விஸ்தீரணம் 190,94901 ஏக்கராக்கள். இதில் சாகுபடியாவது 30,99,880 ஏக்கராக்கள். இதிலிருந்து வரும் வருமானம் ரூ. 2,38,28,737. சென்னை அரசாங்கத்திற்கு கிஸ்திகட்டுவது ரூ. 49,91,532. ஜமீன்தாரி நிலத்தையுடைய ஒரு விவசாயி, ரயத்துவாரி விவசாயியைவிட மூன்றுமடங்கு அதிக வரியை அதாவது கிட்டத்தட்ட ஏக்கர் 1-க்கு ரூ. 7½ வீதம் செலுத்துகிறான்.



சென்னை மாகாண ஜமீன்தாரி நிலை.

| | வரவு ரூ. | பேஷ்குஷ் ரூ. |
|---|---|---|
| பர்லக்கிமடி | 4,98,400 | 79,787 |
| விஜயநகரம் | 20,88,690 | 4,94,816 |
| பொப்பிலி | 6,26,895 | 83,453 |
| ஜயபூர் | 11,44,832 | 15,988 |
| பித்தாபுரம் | 9,43,023 | 2,62,782 |
| தேவக்கோட்டை (கிருஷ்ணா ஜில்லா) | 2,51,230 | 79,495 |
| வேங்கடகிரி | 11,62,240 | 3,68,734 |
| கார்வேட் நகர் | 3,98,598 | 1,73,842 |
| காலகஸ்தி | 4,32,717 | 1,72,982 |
| சிவகங்கை | 14,83,611 | 2,92,627 |
| ராமனாதபுரம் | 10,47,800 | 77,985 |
| எட்டயபுரம் | 2,96,258 | |

**எப்படிச் சகிப்பது?**

ஜமீன்தாரர்களுக்குத் தரப்படும் நஷ்டஈடு, போதாதாம்! இன்னும் தாராளமாக, அவர்கள் விஷயத்திலே நடந்துகொள்ள வேண்டுமென்று, காங்கிரஸ் மேலிடம், தாக்கீது பிறப்பித்துவிட்டது!

இங்கேயோ, பத்திரிகைகள் எல்லாம், பொறி பறக்க எழுதின—நாட்டு மக்களின் உழைப்பை உறிஞ்சிக் கொழுத்த ஜமீன்தாரர்களிடம், அதிகமான அக்கரை காட்டுவது கூடாது என்று.

பல பத்திரிகைகள்-[காங்கிரஸ் பற்றுள்ளவை] 10 கோடி நஷ்ட ஈடு தருவது அக்ரமம் என்று எழுதின.

பல, மாநாடுகளிலே, நஷ்டஈடு தரவே கூடாது, என்று காங்கிரஸ் காரர்களே தீர்மானங்கள் நிறைவேற்றினர். காங்கிரஸ் பிரசாரகர்களோ, ஜமீன்தாரர்களை ஒழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறோம் என்று குரலை உயர்த்தி உயர்த்திப் பேசினர். கடைசியில், காங்கிரஸ்மேலிடம் கட்டளை பிறப்பிக்கிறது, தாராளமாகப்பணம் கொடு! என்று. பத்துகோடி போதாதாம்! ஏழைகளைக் காப்பாற்றும் தலைவர்களின் போக்கு இவ்விதமாகவா இருப்பது!

பல தலைமுறைகளாகப், பாடுபடாமல், வாழ்ந்து வந்த ஜமீன்தாரர்களுக்குப் பத்துக்கோடி போதாதாம்! இன்னமும் கொட்டிக் கொடுக்க வேண்டுமாம்.

இப்படி ஏராளமான பணத்தைக், கோடி கோடியாக, நஷ்ட ஈடு கொடுத்து, ஜமீன்தாரர்களைக் கொழுக்க வைப்பது நியாயமா.?

மக்கள் தலையிலே, இந்தப் புதுச்சுமையை ஏற்றுவது சரியா? பத்துகோடிக்குமேல் பணம் கொட்டிக் கொடுத்துவிட்டு, இந்த ஜமீன்களைப் பெறுவதுதான், சமதர்மமா?

இந்தப் பணத்தைக்கொண்டு, காடுமேடுகளைக் கூடப் புதிய வயல்களாக்கிவிடலாமே! ஏன் இவ்வளவு பயம், காட்டு ராஜாக்களிடம்!



நாட்டை ஆளவந்தவர்களுக்கும் காட்டு ராஜாக்களுக்கும், ஏன் இந்த நேசம் ஏற்பட்டது? இதற்கு, ஜமீன் ஒழிப்பு என்று பெயர் கூறுவதைவிட, ஜமீன்தாரர்களின், பணமுடையைத் தீர்க்கக் காங்கிரஸ் சர்க்கார் செய்யும் உதவி, என்று ஏன், சொல்லக்கூடாது. பொருத்தமாக இருக்குமே! காங்கிரஸ் தலைமை, மேலிடம், இப்படித்தான், பணக்காரர் சார்பாக இருக்கும், என்று நாம் கூறுவதிலே, என்ன தவறு இருக்கிறது.

“ஒரு பலாத்காரப் புரட்சி ஏற்பட்டிருக்குமானல், இந்த ஜமீன்தாரர்கள், மடாதிபதிகள், ஆகியோர் உயிரோடாவது தப்பி இருப்பார்களா?” என்று நண்பர் சிவஞானம் ஒரு மாநாட்டிலே பேசும்போது கேட்டார்.

நிச்சயமாகத் தப்பமாட்டார்கள். அதுகூட வேண்டாம். உண்மையிலேயே, ஏழைகளின் நன்மைக்காகவே ஆட்சி நடத்தும் சர்க்கார் இருந்தால், இப்படி, ஜமீன்தாரர்களுக்குப் பத்துக்கோடி தருவதுகூடப் போதாது, மேலும் தாராளமாகத் தரவேண்டும், என்று கூறுமா? நேதாஜி பெயர் கூறி, ஜெயப்பிரகாஷ் பெயர்கூறி, அருணாவின் பெயர்கூறி, கம்யூனிஸ்டுகளின் போக்கையும் திராவிடர்கழகத்தின் போக்கையும் ஒருசேரக் கண்டிக்கும், தீவிர வாதம் பேசும் காங்கிரஸ் நண்பர்கள், காங்கிரஸ் மேலிடம், ஜமீன்தாரர்களிடம் காட்டும் கருணைக்கு, என்ன சமாதானம் கூறப்போகிறார்கள். நமக்கல்ல—தங்கள் நெஞ்சுக்கு. பழைய ஏடுகளை மீண்டும் படித்துப்பார்க்கட்டும், பத்துக்

108783
V211,93C(x
N4

கோடி நஷ்ட ஈடு தருவதே அதிகம்—நஷ்டஈடு ஏன் தரவேண்டும், என்றெல்லாம், பேசியவைகள், எழுதியவைகள், ஏராளமாக இருக்கும்.

இவ்வளவும், ஒரேநாள் பேட்டியிலே தகருகிறதே!! பித்தாபுரமும், இராமநாதபுரமும், பொப்பிலியும், விஜயநகரமும் காங்கிரஸ் மேலிடத்தை ஒரேநாள் பேட்டிகண்டு, தங்கள் பக்கம் 'ஜெயம்' உண்டாகும்படிச் செய்துவிட்டார்களே! இவ்வளவு காலமாக ஜெமீன்தாரர்களின்பெயரைக் கேள்விப்பட்டாலே, கடுகடுத்து வந்த காங்கிரஸ் மேலிடம், ஏன், இப்போது, ஏழையின் குரலை மதிக்க மறுத்து, இன்னும் சற்றுத் தாராளமாக நஷ்டஈடு தரவேண்டும் என்று கூறுகிறது?

ஜமீன்முறை ரத்து ஆவதால், இந்த ஜமீன்தாரர்கள், அடையப்போகும் கஷ்டம் என்ன?

ஏராளமாகச் சொந்த நிலம் இருக்கிறது.

மாடமாளிகைகள் உள்ளன. மணி அணிக் குவியலும் உள்ளன. பலருக்கு, 'வருமானம்' தரும் வேறு வியாபாரமும் உண்டு.

இவ்வளவும் போதாதென்று, இப்போது 'ரொக்கம்' தருகிறார்கள். அதுவும் பத்துக்கோடி போதாதாம்!!

இவ்வளவு தாராளமாக, ஜமீன்தாரர்களிடம் நடந்துகொள்ளவேண்டிய அவசியம் என்ன?

காங்கிரசிலே, தீவிரமான திட்டம் இருக்கிறது என்று, நம்பிய, அதே நம்பிக்கையுடன் பேசிய



நண்பர்கள், இந்தத் 'தாராள மனப்பான்மைக்கு' என்ன காரணம் காட்டப்போகிறார்கள்?

ஏற்கனவே, பொருளாதார நிலை சீர் குலைந்திருக்கிறது. மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்துக்கான காரியங்களுக்குப் போதுமான பணம் இல்லை. இந்த நிலையில், ஜமீன்தாரர்களுக்குத் தாராளமாகத் தரவேண்டும் என்று காங்கிரஸ் மேலிடம் கூறுகிறது! ஏன், காங்கிரசிலுள்ள முற்போக்காளர்கள், இந்த அக்ரமத்தைத் தடுக்கக் கூடாது? "ஜமீன்தாரர்களின் நிலைமை, எங்களுக்கு நன்றாகத் தெரியும்—அவர்களுக்குத் தருவதாகச் சொல்லப்படும் பத்துக்கோடி ரூபாயே அதிகம். மேலும் கொட்டித்தரச் சொல்வது அநியாயம். இதை நாங்கள் ஏற்கமுடியாது" என்று, ஏன் துணிவுடன் கூறக் கூடாது? காங்கிரஸ் மேலிடத்தின் தாக்கீதுகளின்படி நடந்துகொள்வதுதான், ஆட்சி முறையாக இருக்கவேண்டும் என்றால், நிலைமையை உணராததாலேயோ, முதலாளித்துவத்தின் மனதை நோகச் செய்யக் கூடாது என்பதனாலேயோ, காங்கிரஸ் மேலிடம், இப்படிப்பட்ட அநியாயத் தீர்ப்புகள் அளிப்பதையும் கூடச் சகித்துக் கொள்வதுதான் ஆட்சிமுறை என்றால், இங்கே ஏன் ஓர் மந்திரிசபை, அது அமர ஒரு அலங்கார மண்டபம், ஒரு பரிவாரம், இவ்வளவும் ஏன்?

மேலதிகாரியின் உத்தரவின்படி நடக்கும், சிப்பந்திகளாக இருப்பதுதான் தமிழன் இரத்தம் சிந்திக், குமரனைப் பறிகொடுத்து, சிதம்பரத்தைச்

சீரழித்துக் கண்ட பலனா? காங்கிரஸ் இளைஞர்கள்—முற்போக்கு நோக்கமுடையவர்கள் — உண்மையிலேயே, இந்த நிலைமையைக் கண்டு கோபமோ, வெட்கமோ, துக்கமோ, அடையவில்லையா? அவர்களின் மனம் மரத்துவிட்டதா? காங்கிரஸ் மேலிடத்தாரின் சுட்டு விரல் காட்டும் குறிப்பறிந்து நடப்பதுதான் வீரர்க்கழகா? விவேகியின் இலட்சணமா? கண்களை விற்றுச் சித்திரம் வாங்கினால், கை கொட்டிச் சிரிக்காரோ! என்று பாடிய பாரதியின் பெயர் கூறிடக் கேட்கிறோம்! எதற்கும் மேலிடத்துக்கு, 'காவடி' எடுத்து, அங்கு பிறக்கும் 'கட்டளை'க்குக் காத்திருந்து காரியமாற்றும் அளவுக்கு, இங்கு, நமது நாட்டுச் சுயமரியாதையையும், உரிமையையும் பறிகொடுத்துவிட்டு, நாங்கள் 'இந்திய யூனியனிலே' ஓர் உன்னதமான இடம் பெற்றிருக்கிறோம், என்று பேசினால், அரசியல் அறிஞர்கள் கேலி செய்யாரோ?

அவர்களைக்கூடத் தள்ளி விடுவோம். மேலிடத்தார் தமது பக்கம் பேசியதையும், அதற்குக் காங்கிரசார் தலையாட்டியதையும், கண்டு, களிப்புடன், கொர்வத்துடன், திரும்பும் ஜமீன்தார்கள், காங்கிரஸ் தீவிரவாதிகளைப் பார்க்கும்போது — கேலி செய்யும் கண்களுடன் பார்க்கும்போது — முகத்தைக் கண்டு, "இதோ! காங்கிரஸ் வீராதி வீரன்! எமக்கு நஷ்டஈடும் தரக்கூடாது என்று ஆர்ப்பரித்தார்! மண்டையில் ஓங்கி அடித்தனர், மேலிடத்தார். வெட்கத்தால் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு செல்கிறார்!" என்று பேசும் கண்களுடன் பார்ப்பரே, அதையுமா சகித்துக்கொள்ள வேண்டும்! இன்னும் எவ்வளவு? இன்னும் எவ்வளவு கொடுமைகளை, அலட்சியப்படுத்தப்படுவதைச் சகித்துக் கொள்ளப் போகிறார்கள் காங்கிரசில் உள்ள தீவிர நோக்கமுடையோர்.



### தெரிந்துகொள்ளுங்கள்

ஜமீன் ஒழிப்புக்குச் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலே, பெருவாரியான ஆதரவு கிடைத்தது. ஜமீன்களை ஒழிப்பது பற்றி யாரும், ஒரு துளியும், குறைகூறவுமில்லை. மந்திரி காளா வெங்கட்ராவ் ஒரு மாநாட்டிலே சொன்னதுபோல், 'அழுவாரற்று'ப் போயின இந்த ஜமீன் கும்பல். ஆனால் அதே சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலே ஜமீன் ஒழிப்புடன், இனம் ஒழிப்பும் சேர்ந்த உடனே, எதிர்ப்பும் கண்டனமும், சதியும் புரட்சியும், மிரட்டலும் மேலிடத்துக்குத் தூதும், பலமாகி விட்டன.

மந்திரிகளிலே, [illegible] மனப்பான்மை! பத்திரிகைகள், ஒன்றிரண்டு தவிர, மற்றவைகள் அவ்வளவும், இனம்தாரர் பக்கம், கச்சையை வரிந்து கட்டிக்கொண்டுள்ளன. ஏன்? ஜமீன்தாரர்கள், 'மூக்காலே [illegible]வீசம் முந்திரை' பார்ப்பனரல்லாதார். இனம்தாரர்களிலே பெரும்பாலானவர்கள், பார்ப்பனர்! எதிர்ப்புக்குக் காரணம், இதுதான். பார்ப்பனரின் சுகபோகத்துக்குக் கேடுகூட அல்ல, கொஞ்சம் ஆட்டம் கண்டுவிடும் என்றஉடனே, எவ்வளவு எதிர்ப்புக் கண்டனம் கிளம்புகிறது, என்பதைக் கவனியுங்கள்! காங்கிரசிலுள்ள தமிழர்

களே! இந்த மனப்பான்மை கொண்டவர்கள், வகுப்புவாதிகள் அல்லவா, சுயஜாதி அபிமானம் கொண்டவர்களல்லவா! இவர்கள், இவ்வளவு பச்சையாகத் தங்கள் ‘ஜாதி’க்கு உதவிசெய்ய ஜல்லடம் கட்டும்போது கூட, வகுப்புவாதி என்று இவர்களைக் கூற, உனக்கு மனம் வரவில்லை. ஆனால் அதேபோது, ஜமீன்தாரர்கள், பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்துக்காக, ஜமீன் ஒழிப்புக் கூடாது என்று, திராவிடர்கழகம் கூறவில்லை; ஜமீன்முறை கொடியது—எனவே ஒழியத்தான் வேண்டும்—அந்த முறை ஒழிவதால், சில பார்ப்பனரல்லாத மேட்டுக்குடியினரின் வாழ்க்கை ஜொலிப்புக் கெட்டுவிட்டால், கேடொன்றில்லை—ஏழை, வாழ்வான்—அதுவே எமது குறிக்கோள்—ஆகவே, ஜமீன் ஒழிப்பை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று திராவிடர் கழகம் கூறுகிறது. ஆனால், திராவிடர் கழகத்தை, வகுப்புவாதக்கழகம் என்று ஏசுகிறார்கள்! உண்மையிலே, வஞ்சனை மிக்க வகுப்புவாதச் செயல் புரிபவர்களைத் தேசாபிமானி என்றும் கூறுகிறார்கள். ஏனோ இந்தப் போக்கு!

இந்தப் பிரச்னையின் காரணமாக, ஓரளவுக்குக் காங்கிரஸ் தமிழர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

ஜமீன் ஒழிப்புக்கு, சட்டசபைக் காங்கிரஸ் கட்சி, பெருவாரியான ஆதரவு தந்தது ஜமீன்தாரர்கள் பெரும்பாலோர் பார்ப்பனரல்லாதார் என்ற காரணத்தால். அதே சட்டசபைக் காங்கிரஸ் கட்சி, இனாம் ஒழிப்புக்கு, எதிர்ப்புக் காட்டுகிறது. இனாம்தாரர்களில் பெரும்பாலோர், பார்ப்பனர் என்ற காரணத்தால்.



இந்தப் போக்கு வருந்தத்தக்க விளைவுகளை உண்டாக்கும்.

“இனாம்தாரர்களுக்கு, விதிவிலக்கு அளிக்கக் காங்கிரஸ் மேலிடம் கூறுமானால், தென்னாட்டிலே, பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் பிரச்னை, பலமுள்ளதாகும்”

என்ற கருத்துள்ள தந்தி, காங்கிரஸ் மேலிடத்துக்குத் தரப்பட்டிருக்கிறது. வகுப்புவாத ஸ்தாபனம், எதுவும் தரவில்லை. சென்னைக் காங்கிரஸ் கமிட்டியினர் தந்தி கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் நெஞ்சுறுதியும் நேர்மையும், பாராட்டுதலுக்குரியன. இவ்வளவு விளக்கமாக நிலையை எடுத்துக் கூறின பிறகு, காங்கிரஸ் மேலிடம், இனாம்தாரர்களை ஆதரிப்பது என்று தீர்மானித்தால், நிச்சயமாக, அவர்களின் நோக்கம் பார்ப்பனப் பாதுகாப்புத்தான் என்று முத்துரங்கங்கள் கூட உணர்ந்து கொள்வார்கள்.

**அவினாசிகள் கூட ஆத்திரமடைவார்கள்!**

ஜாதிப்பற்றுக் காரணமாக, இனாம்தாரர்களை ஆதரிக்கப் பார்ப்பனத் தலைவர்கள் கிளம்பியது போலவே, தங்கள் செல்வாக்கு நீடித்திருப்பதற்கு இனாம்தாரர் முறை இருந்தாகவேண்டும் என்று சில பார்ப்பனரல்லாத தலைவர்களும் பாடுபடுகிறார்கள்.

ஜமீன், மடம், மிட்டா, மேட்டுக்குடி இவற்றுக்கு, காவல் புரியவும், ஏவல் செய்யவும், கிளம்பியுள்ள சர்தார் வேதரத்னம் போன்றவர்கள், இனம்தாரருக்காகப் பரிந்துபேசுகின்றனர்.

தஞ்சை மாவட்டத்திலே, சுமார் 120 கிராமங்கள் உள்ளன, இனம் முறைப்படி. இவை சத்திரம், சாவடி, சமஸ்கிருத பள்ளிக்கூடம் போன்ற காரியங்களுக்காக, முன்னாளிலே இருந்த—மூளையில் மூடுபனி படிந்த முடிமன்னர் சிலரால், 'இனம்' தரப்பட்டவை. மூளையில் மூடுபனி என்று கடுமையாகக் கூறுகிறோமே என்று கோபம் பிறக்கக் கூடும் சிலருக்கு. ஆனால் இதோ ஓர் எடுத்துக் காட்டு. இதைக் கவனித்துவிட்டுப் பிறகு கூறட்டும், நாம் கூறினது கடுமையான வார்த்தையா என்பதை.

மிரட்டூர் என்றோர் இனம் கிராமம் இருக்கிறது. பார்ப்பனர்களுக்கு இனம் தரப்பட்டது. இந்த இனம் ஏன் தரப்பட்டது என்ற காரணத்தைக் கண்டால், வேடிக்கையும் வேதனையும் ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டோடி வரும்.

எப்போதோ ஓர்முறை, சில பார்ப்பனர்கள், 'வருண ஜெபம்' செய்தார்களாம்; மழை பெய்ததாம். உடனே மன்னன், மழையை வரவழைத்த மகானுபாவர்களுக்கு, இந்தக் கிராமத்தை 'இனம்' தந்தானாம். மழைக்கும் மந்திரத்துக்கும் சம்பந்தமிருப்பதாக எண்ணின மன்னனை, மூளையிலே மூடுபனி உள்ளவன் என்று கூறுவது தவறா !



இப்படித்தான் இருக்கும், பல இனம்களின் யோக்யதைகளை அலசினால். இவைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று, நண்பர் நாடிமுத்துவும் ஓடி ஆடிப் பாடுபடுகிறாராம். ஏனென்று கேட்டேன், ஒரு இனம் குடியை. "இது தெரியவில்லையா ! தஞ்சாவூர் மாவட்டத்திலே நூறு கிராமங்களுக்கு மேல் உள்ளன, இப்படி இனம்கள். எல்லாம், ஜில்லாபோர்டு, சத்திரம் பரிபாலன இலாக்காவின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகின்றன. இனம் குடிகளிடம், குத்தகைகள் எழுதி வாங்க, குத்தகைக்குவிட, அதை யொட்டிய பல நிர்வாகக் காரியங்களைக் கவனிக்க, ஜில்லாபோர்டுக்கு அதிகாரம் இருப்பதால், அதைக்கொண்டு, ஜில்லாவிலே தேர்தல் சம்பந்தமாகத் தனக்குச் செல்வாக்கு தேடிக்கொள்ளலாம் என்பது நாடிமுத்து அவர்களின் நோக்கம். இப்போதும், நாங்கள் சொந்தத்தில் எந்தக் கொள்கை கொண்டிருந்தாலும், நாடிமுத்து[illegible]ட்டுப்பட்டிருக்கிறோம், இந்தக் காரணத்தால்தான், இந்தச் செல்வாக்கும் போய்விடுமே என்ற பயம் அவருக்கு. ஆகவேதான் அவர் இனம்தாரர்களின் சார்பாகப் பேசுகிறார் என்று கூறினர். தேசபக்தர்களின் திருநோக்கமும் திருவிளையாடலும், எப்படி எப்படி இருக்கிறதென்பதைக் கவனியுங்கள்.

ஒரு M.L.A.—தஞ்சை மாவட்டத்தார்—இனம் குடிகள் அவரைக் கண்டு பேசினார்களாம். அவரும், "ஆமப்பா ! எனக்குத் தெரியாதா இனம் குடிகள் படுகிற கஷ்டம். ஜமீனில் இருப்பதுபோலத்தான்

இனாமிலும் இருக்கிறது. நான் உங்களைப்போல ஏழைதானே. எனக்கு உங்கள் கஷ்டம் தெரியும்" என்று பரிவுடன் பேசினாராம். பேசினது மட்டுமல்ல, இனாம் குடிகளின் குறைபாடுகளை விளக்கும் குறிப்பையும், ஜமீன்களை ஒழிப்பது போலவே இனாம் முறையையும் ஒழித்தாக வேண்டியதன் அவசியத்தையும் விளக்கிடும் அறிக்கையையும் இனாம் குடிகளிடமிருந்து பெற்றுக்கொண்டுபோய், மசோதாக் கொண்டுவரும் மந்திரி காளா வெங்கட்ராவிடம் கொடுத்தாராம். ஆனால் இனாம் குடிகள் சார்பாக இருந்த இதே M.L.A., சில தினங்களுக்குள் 'கரணம்' போட்டுவிட்டார்! இனாம்தாரர்களை ஒழிக்கக்கூடாது, அது மகா பாவம் என்று சில M.L.A—க்கள் கையொப்பமிட்டு வெளியிட்ட அறிக்கையிலே, இவரும் கையொப்பமிட்டார். "ஏன் இந்தக் 'கரணம்' அடித்தீரய்யா!" என்று மனம் நொந்து, இனாம் குடிகள் கேட்டபோது, M.L.A. என்ன சொன்னாராம் தெரியுமா?

"நானாகவா 'கரணம்' போட்டேன். என்ன செய்வேன். அவர் (வேறு ஒரு பிரபல M.L.A. யின் பெயரைக் கூறி) போடச் சொன்னார், போட்டேன். போடாவிட்டால் முடியுமா? நான் அவருக்குக் கட்டுப்பட்டுத்தானே நடக்க வேண்டும். என் நிலைமை உங்களுக்குத் தெரியாதா" என்று ஒரு மூச்சு அழுது தீர்த்தாராம். இப்படி இருக்கிறது, இந்த M. L. A.க்களின் போக்கு. மந்திரி காளா வெங்கட்ராவே, மனவேதனையுடன் இருக்கிறாராம். "நான் எதிர்பார்க்கவே இல்லை, இவ்வளவு எதிர்ப்பு



ஏற்படும் என்று"—எனச் சொல்லி சோகிக்கிறாராம். ஆனால் அந்தச் சோகத்தினூடே ஓர் உறுதியும் தெரிவித்தாராம். என்னாலான வரையில் போராடத்தான் போகிறேன். சட்டசபைக் காங்கிரஸ் கட்சியிலே, யார் என்னைக் கைவிட்டு விட்டாலும் சரி, ஒரே ஒரு அதிகப்படியான ஓட்டு கிடைத்தாலும் சரி, மசோதாவை வெற்றிபெறச் செய்யவே முழு மூச்சாக வேலை செய்வேன். இவ்வளவுக்கும் பிறகு, என் முயற்சியை முறியடித்து விடுவார்களானால், நான் மந்திரி சபையிலே ஒட்டிக்கொண்டிருக்க மாட்டேன்—ராஜிநாமாச் செய்துவிடுவேன் என்றாராம். அந்த உறுதி பாராட்டுதலுக்குரியது.

காளா கொண்டுவரும் மசோதாவை, யாரோ சில கம்யூனிஸ்டுகளும் ஆந்திரர்களும்தான் ஆதரிக்கிறார்கள். இனாம்தாரர், தமிழ் நாட்டிலேதான் அதிகம். தமிழ் நாட்டிலேயோ, காளாவின் மசோதாவுக்கு ஆதரவு இல்லை என்று ஓர் வதந்தியைக் கிளப்பிவிட்டிருக்கிறார்கள். இது விஷமத்தனமானது என்பதை விளக்கவும், இனாம்தாரர் ஒழிப்புக்குத் தமிழகம் ஆதரவு தருகிறது என்பதைத் தெரிவிக்கவும் தமிழ்நாடு இனாம் குடிகள் மாநாடு சென்னையில், இம்மாதம் 27ந் தேதி நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது. மந்திரி காளா வெங்கட்ராவ் வருகிறார். சிவஞானம், ஜீவானந்தம், அண்ணாதுரை ஆகியோர் இதில் கலந்துகொள்ள இருக்கிறார்கள். மடாதிபதிகள் முகாமை முறியடிக்க மக்கள் முகாம் அமைக்கும் இந்த நன்முயற்சி காலமறிந்து செய்யப்படுவதாகும்!

இதற்கிடையில் மயிலை வக்கீல்கள் சட்டப்புத்தகத்தைப் புரட்டியவண்ணம் உள்ளனர். பம்பாய் வக்கீல் முன்ஷியிடம் சிலரும், ஆச்சாரியாரிடம் வேறு சிலரும், சர். கோபாலசாமி ஐயங்காரிடம் சிலரும் ஓடி இருக்கிறார்களாம். இந்த இனாம்தாரர் மசோதா, இரண்டிலொன்று பார்த்துவிடுவது என்ற அளவுக்கு, வேற்றுமை உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டு விடுமோ என்று அஞ்சக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்னை பற்றிய பேச்சு எங்கு, எந்த உருவில் யாரால் பேசப்பட்டாலும், ஒவ்வோர் ஐந்து நிமிஷத்துக்குப் பிறகும், "அதுதானே ஐயா அந்த ஈரோட்டுப் பெரியார், இவர்களைக் கண்டித்த வண்ணம் இருக்கிறார். அவர் சொல்கிறபடிதானே நிலைமை இருக்கு. பார்ப்பனர்களுக்கு ஒரு துளி இலாபம் குறைகிறது என்றாலும் இமயமலையிலிருந்து கன்னியாகுமரி வரையிலே பார்ப்பனர்கள் ஒன்றுகூடி விடுகிறார்கள்." என்று பேசுகின்றனர்.

### சாஸ்திரியார் கட்டிய ஜல்லடம்

இனாம்தாரர்கள் சார்பாக T. R. வெங்கட்ராம சாஸ்திரியார், ஜல்லடம் கட்டிக்கொண்டு புறப்பட்டிருக்கிறாரல்லவா! அந்த ஜல்லடம், அவர் கட்டிப் பத்தாண்டுகளுக்கு மேலாகிறது.

அவருக்கு முன்பும், பலர் ஜல்லடம் கட்டினர், சர்மா ஐயர், ஐயங்கார், சர், அட்வகேட் ஜனரல் ஆகியோர். நீண்ட போர்! சுவையுள்ள காரணம், அப்போருக்கு. அந்தக் காரண விளக்கம் இது.



இனாம்தாரர்கள் ஜமீன்தாரர்போல் அல்ல. அவர்களுக்கு, உரிமை அதிகம். ஜெமீன்தாரராவது நிலத்துக்கு வரி வசூலித்து, ஒரு பகுதியைச் சர்க்காருக்குக் கொடுத்துவிட்டுப், பெரும் பகுதியைத் தனக்காக எடுத்துக்கொள்ளமட்டுமே உரிமை கொண்டவர். இனாம்தாரர் இதுபோல வரி வசூலிக்கும் அதிகாரி மட்டுமல்ல, நிலத்துக்கு சர்வ சுதந்திரத்துடன், சர்வ உரிமைகளை அனுபவிக்கும் நிலை பெற்றவர்—என்றுதான் சட்டமும் சம்பிரதாயமும் இருந்தது. 1908-ல் இந்த முறைப்படியே, இனாம்தாரர்களின் உரிமையைப் பாதுகாத்தும், அந்தஸ்தை உயர்த்தியும் பிரிட்டிஷார் சட்டம் இயற்றினர்.

ஆனால், இனாம்தாரர்களின் கொட்டத்தை 1936-ம் வருஷ இனாம் சட்டத்தின்மூலம், ஜஸ்டிஸ் மந்திரி சபை நொருக்கிற்று.

இனாம்தாரர்களும், ஜெமீன்தாரர் போன்றவர்களே—நிலத்துக்குத் வரி வசூலிக்கும் உரிமை பெற்றவர்களே—இனாம் குடிகளுக்கு அவர்கள் கோமான்களல்ல என்று சட்டம் இயற்றினர்.

அப்போது, மயிலையும் திருவல்லிக்கேணியும், இப்போது போடுவதுபோலவே, கூக்குரலிட்டன.

சர்மாக்களும், ஆச்சாரியாரும் சாஸ்திர விரோதமான காரியம் இது—சண்டாளர்கள் ஆட்சியால் நேரிடுகிறது, என்று கண்டித்தனர்.

பொதுவுடைமையைப் புகுத்தும் சட்டம் இது—பரம்பரை பாத்யதையைப் பறிக்கும் சட்டம் இது—

நாஸ்திகர்களின் சட்டம் இது—என்று T. R. வெங்கட்ராம சாஸ்திரியார் அப்போது ஆர்ப்பரித்தார்—இப்போதுபோலவே. ஓடி ஓடி மாநாடுகள் கூட்டினர். பாபட்லாவில் நடந்த ஒரு மாநாட்டிலே, ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்களான ஜமீன்தாரர்களும், தொண்டர்களான புரட்சிக்காரர்களும், ஒன்று கூடிக்கொண்டு, இனும்தாரர்களை ஒழிக்கச் சதி செய்கிறார்கள் என்று ஓலமிட்டார். இதை சட்டமாகும்படி விடமாட்டேன் என்று சபதம் செய்தார். அப்போதும், அவர் அகில உலகத்திலே உள்ள நாடுகளின் சட்ட புத்தகங்களைச் சாட்சிக்கு இழுத்தார்.

காங்கிரஸ் தலைவர்கள், சாஸ்திரியாருடன் கை கோர்த்துக்கொண்டு, எந்தச் சட்டம் உண்மையாகவே, நிலமுதலாளித்துவத்தின் ஒரு பகுதியைத் தாக்கி, ஏழை உழவனுக்கு உரிமை கிடைக்க வழி செய்ததோ, அதே இனும் சட்டத்தை எதிர்த்துப் பேசி, பொதுமக்கள் மனதைக் கலைத்தனர்.

ஜஸ்டிஸ் மந்திரிகள் சட்ட புத்தகங்களைச் சட்டை செய்யவில்லை. சாஸ்திரியாரின் புலம்பலைப் பொருட்படுத்தவில்லை. இனும் குடிகளின் நன்மையைக் கைவிட முடியாது என்று தெளிவாகக் கூறி விட்டனர்.

மயிலையும், திருவல்லிக்கேணியும் கவர்னரிடம் தஞ்சம் புகுந்தன. கவர்னர் மயிலை மகிமையாலும், திருவல்லிக்கேணி தரிசன விசேஷத்தாலும் சொக்கிப்போனார். சட்ட சபையிலே, இனும் குடிகள் மசோதா நிறைவேறியும், அதனைச் சட்டமாக்க முடியாது என்று கூறினர். இருமுறை நிராகரித்தார். ஜஸ்டிஸ் மந்திரிகளோ இந்தப் பிரச்சினையை விட்டுவிட மறுத்தனர்; கடைசியில் கவர்னர் இணங்கினர்.



மயிலை, சென்னையிலிருந்து நேரே டில்லிக்குத் தாவிற்று! வைசிராயிடம் காவடி எடுத்தது.

வைசிராய், அவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண்டு, சட்டத்தை அங்கீகரிக்க மறுத்தார் விடவில்லை ஜஸ்டிஸ் மந்திரிகள்; போராடினர் கடைசியில், வேறுவழியின்றி, வைசிராயும் இணங்கினர். சட்டம் நிறைவேற்றப்பட்டது. இவ்வளவு இடையூறுகள் பதினோராண்டுகளுக்கு முன்பு. இப்போது, அந்தச் சட்டத்தின் வளர்ச்சி போன்ற புதிய சட்டம் ஏற்பட இருக்கிறது. இப்போதும் அந்தப் பழைய முறைப்படியே எதிர்ப்பு, பார்ப்பனத் தலைவர்களிடமிருந்தும், காங்கிரசிலுள்ள, வைதிகர்கள், காட்டுராஜாக்கள் ஆகியோரிடமிருந்தும் வருகிறது.

1908-ம் வருஷச் சட்டத்தின்படி, இனும் நிலங்களை, இனும்தாரர், தன் இஷ்டப்படி, விற்க உரிமை இருந்தது. ஜஸ்டிஸ் மந்திரி சபையின் சட்டத்தின் பலனாக, இனும்தாரர்களின் சொக்கட்டானகை, நிலங்கள் இருந்த நிலை ஒழிந்து, 1933-ம் வருஷம் நவம்பர் மாதத் துவக்கத்தின்போது, எங்கெந்த இனும் நிலம், எங்கெந்தக் குடியானவனிடமிருந்ததோ, அவனுக்கு உரிமை கிடைத்தது. இனும்தாரர், வரி வாங்கும் அளவோடு இருக்கவேண்டியதாயிற்று.

இப்போது கொண்டுவரப்படும் மசோதா, இந்த வரி வசூலிக்கும் வேலையையும், இனி இனாம்தாரரிடம் விடவேண்டியதில்லை; அவர்களுக்கு ஏதேனும் பணம், நஷ்டஈடாகக் கொடுத்துவிட்டு, நிலத்தை, ரயத்வாரி முறையின்கீழ்க் கொண்டுவந்து விடலாம் என்பதாகும்.

"ஏதடா தொல்லை வளருகிறது! ஜஸ்டிஸ் மந்திரிகளோ, நமக்கு நிலத்தின் மீது பூரண பாத்யதை கிடையாது என்றனர்—இப்போது காங்கிரஸ் மந்திரிகளோ, இந்த வரிவசூலிக்கும் காரியமும் இனி கூடாது என்கிறார்கள். நமக்கு உள்ள ஆதிக்கம், இலாபம் எல்லாம் போகின்றனவே!" என்று இனாம்தாரர்கள் அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

பிடிபட்ட கள்ளனை கூட, போலீசார் கொடுக்கும் அடி உதையையும் மறந்துவிட்டு, இவ்வளவு கஷ்டப்பட்டுத் திருடிய பொருளை, போலீசார் சொந்தக்காரனிடம் கொடுத்துவிடுகிறார்களே! நாம் பட்ட கஷ்டமெல்லாம் வீணாயிற்றே—என்று விசாரப்படக்கூடும்.

ஆனால், அந்த விசாரத்துக்காக எப்படிக் களவு அனுமதிக்கப்படமுடியாதோ, அதே போலத்தான் ஜமீன், இனாம் போன்ற முறைகளையும், நாகரிக சர்க்கார் அனுமதிக்க முடியாது, இனாம்தாரர்களின் கண்களிலே இரத்தக்கண்ணீர் வழிந்தாலுங்கூட.



இனாம்தாரர்களிலே, மிகச் சிறு அளவு நிலம் வைத்துக் கொண்டுள்ளவர்களுக்காக வாதாடுவதாகக் கூறிக்கொண்டு, மறைமுகமாக, மடாதிபதிகள் போன்ற கொழுத்த இனாம்தாரர்கள் சார்பிலே வாதாடுகிறார், வக்கீல் தொழிலை வர்க்க நலனுக்கு வழங்கும் வெங்கட்ராம சாஸ்திரியார். ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலங்கள் மட்டுமே வைத்துக் கொண்டுள்ள ஏழை இனாம்தாரரின் கண்ணீரைக் காட்டுகிறார். அந்தக் கண்ணீரைத் துடைக்கச் சொல்லிமட்டும் கேட்கிறாரா? இல்லை! அதைச் சாக்குக்காட்டி, ஏமாந்த ராஜாக்களிடம் ஏதேதோ செய்து நிலத்தைத் தட்டிப் பறித்துக்கொண்டு, இனாம்தாரராகி, இன்று பாடுபடாமல் பன்னீரில் குளிக்கும் பேர்வழிகளையும் சேர்த்துக் காப்பாற்றக் கிளம்புகிறார்.

இந்தக் காரியத்தை இவர், தொடர்ந்து செய்து வருகிறார். ஜஸ்டிஸ் மந்திரிகள், இனாம் ஒழிப்புச் சட்டம் கொண்டுவந்த காலமுதற்கொண்டு, விடாது செய்து வருகிறார்.

"பொதுக் கூட்டங்கள் போட்டோம்—மாநாடுகள் நடத்தினோம்—துண்டு வெளியீடுகள் போட்டோம்; ஜஸ்டிஸ் மந்திரி சபையின் திட்டத்தைப் பலவழிகளிலும் தாக்கினோம், "தகர்க்க" என்று அவரே ஆணவத்துடன் கூறினார், பிரகாசம் அமைத்த ஜமீன்முறை விசாரணைக் கமிட்டியார் முன்பு.

இந்தக் கமிட்டி, ஆச்சாரியார் மந்திரிசபைக் காலத்திலே அமைக்கப்பட்டது. பிரகாசம் இதற்

குத் தலைவர். ஜமீன்தாரர்கள் சார்பிலே, இந்தக் கமிட்டியிலே, மிர்சாபூர் ஜமீன்தாரர் வீற்றிருந்தார்;

இந்தக் கமிட்டியார், விசாரணை நடத்தினர்; கலெக்டர்களின் குறிப்புக்களைத் தொகுத்தனர்; நிலப்பிரபுக்களின் அறிக்கைகளைச் சேர்த்தனர். பல இடங்களைக் கண்டனர்; ஏராளமான பணம் செலவு செய்து, பல ஆயிரம் பக்கங்கள் கொண்ட அறிக்கை தயாரித்தனர்.

இவ்வளவும் செய்துவிட்டு, ஜமீன்தாரி ஒழிப்பை மட்டும் செய்யாமல், ஆச்சாரியார் மந்திரி சபை கலைந்துவிட்டது.

அந்தக் கமிட்டியின் முன்பு, இன்று மந்திரியாக உள்ள காளா வெங்கட்ராவ் சாட்சியம் கூறுகையில், "ஜமீன்களைப்போலவே இனாம்களும் ஒழிக்கப்படவேண்டியவைகளே" என்று பேசியிருக்கிறார்.

அதே கமிட்டியின் முன் சாட்சியம் தந்த வெங்கட்ராம சாஸ்திரியார், இப்போதுபோலவே இனாம்தாரர்களுக்காகப் பிடிவாதமாக வாதாடியதோடு, ஜஸ்டிஸ் மந்திரி சபை நிறைவேற்றிய சட்டத்தையும் ரத்துசெய்து, இனாம்தாரர்களுக்கு முழு உரிமை கிடைக்கும்படி செய்யவேண்டுமென்று வற்புறுத்திப் பேசினார்.

இங்ஙனம் இவர் இடைவிடாமல் இனாம்தாரர் பக்கம் வேலை செய்து வருவதுடன், 'இந்து' பத்திரிகையின் ஆதரவைப் பெற்று, அவ்வப்போது ஏற்படும் மந்திரி சபைகளை, (ஜஸ்டிஸ் மந்திரி சபை



யானாலும் சரி, காங்கிரஸ் மந்திரி சபையானாலும் சரி) மிரட்டிப்பார்க்கிறார்.

ஜெட்லண்டு பிரபு இந்தியா மந்திரியாக இருந்தபோது, கவர்னர், வைசிராய் ஆகிய இருவர் போட்ட முட்டுக்கட்டைகளைத் தாண்டி நிறைவேறிய இனாம் சட்டத்தை, இந்தியா மந்திரி தொலைக்க வேண்டுமென்று, பெரிய மகஜர் தயாரித்து அதை அனுப்பிவைக்கும்படி சென்னை சர்க்காரைக் கேட்டுக்கொண்டார். அப்போது ஆச்சாரியார் முதலமைச்சர். அவருக்குச் சங்கடமான நிலை ஏற்பட்டுவிட்டது. காங்கிரஸ் கட்சியினர், இந்தியா மந்திரி எங்கள் விவகாரத்தில் தலையிட நாங்கள் அனுமதிக்கப்போவதில்லை என்று மேடை அதிரப் பேசிவிட்டனர். எனவே ஆச்சாரியார், சாஸ்திரியாரின் தாட்சண்யத்துக்காக வேண்டி, இந்தியா மந்திரிக்கு மகஜர் அனுப்புவது தவறு என்று காங்கிரஸ் சட்டசபையினர் கூறிவிட்டனர். வெங்கட்ராம சாஸ்திரியார், காரியம் பலிக்காமல் வீடு திரும்பினார்.

இதுபோல் இவர் இடைவிடாது செய்துவருவது மட்டுமல்ல; இவர்போலச் சில பார்ப்பனத் தலைவர்கள் பன்னெடு நாட்களாக இந்தக் காரியம் செய்து வருகின்றனர்.

கிழக்கிந்தியக் கம்பெனி நாட்டை ஆளத் தொடங்கிய உடனே, ஆங்காங்கு காட்டு ராஜாக்கள் கிளம்பினர். அவர்களில் பலரைச் 'சரிப்படுத்த' கம்பெனி வேலை செய்தது. ஜமீன்தாரர்

கள் முளைத்தனர். அதேபோது, ஒரு பெரிய கும்பல், நாங்கள் இனாம்தாரர்கள், சுரோத்திரியதாரர்கள், அக்ரகாரதாரர்கள், ஜாகீர்தாரர்கள், என்று பல்வேறு பெயர்களைக் கூறிக்கொண்டு, புராண ஆதாரமுதற்கொண்டு, செப்பேடு ஆதாரம் வரையிலே, 'சாசனம்' இருப்பதாகக் காட்டிக்கொண்டும், "சாசனம்" என்று ஏதும் இல்லை ஆனால் 'சந்திரசூரியாள் உள்ளவரை, ஆண்டு அனுபவித்துக்கொள்ள வேண்டியது' என்று எமக்கு, இன்ன மகாராஜா வாக்களித்தார். அதுபோலவே நாங்கள், இந்தக் கிராமங்களை 'பாரம்பரியமாய்' ஆண்டு அனுபவித்துவருகிறோம் என்று கூறிக்கொண்டும், ஏராளமானவர்கள் கிளம்பினர்.

இவர்களிலே யார் உண்மையானவர்கள், யார் போலிகள் என்பதை ஆராய்வது, பெரிய தலைவலியாகி விட்டது பரங்கியருக்கு. கடைசியில் சுமார் 50 வருஷகாலமாக, யாரார் 'இனாம்' முறையில், நிலங்களையோ, ஊர்களையோ அனுபவித்து வந்தார்கள் என்று ஏற்படுகிறதோ, அவர்களுக்கு இனாம்தாரி உரிமை உண்டென்று நாங்கள் அங்கீகரிக்கிறோம் என்று கூறிவிட்டனர். அவர்களுக்கு என்ன அதனாலே நஷ்டம்! அவர்களே அக்ரமமாக நாட்டைப் பிடித்துக்கொண்டவர்கள். எனவே ஆளுக்குக் கொஞ்சம் அகப்பட்ட வரையிலே சுருட்டு! இந்த முறையிலே, புத்துயிர் பெற்றனர் இந்த இனாம்தாரர்கள்.

அதற்குப்பிறகு, இனாம்தாரர்கள் சம்பந்தமான பிரச்னை கிளம்பியபோது, இன்று வெங்கட்



ராம சாஸ்திரியார் அவர்கள் சார்பில் வாதாடுவது போலவே, அப்போது சர். V. பாஷ்யம் ஐயங்கார் போன்றவர்கள் வாதாடினர். இதே 'கைங்கரியத்தை', சர். தேசிகாச்சாரியார், திவான்பகதூர் R. V. சீனுவாச ஐயர், C. K. சீனுவாசராவ், K. R. குருசாமி ஐயர், அந்தநாளில் அட்வகேட் ஜெனரலாக வேலை பார்த்த சிவசாமி ஐயர், நரசிம்மேஸ்வர சர்மா ஆகியோர் செய்துவந்தனர்.

1908 முதல் 1947 வரையில் எந்தெந்தச் சமயத்திலே, யாரால் இனாம்தாரர்களின் பிரச்னை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டாலும், பிரபல பார்ப்பனத் தலைவர்கள் இனாம்தாரர்பக்கமே நின்று வாதாடிக் குறிப்பிட்ட அளவு வெற்றியும் பெற்றுள்ளனர். இந்த வெற்றிக்கு ஒரு பெரிய இடியாக முடிந்தது ஜஸ்டிஸ் மந்திரிசபை கொண்டுவந்து நிறைவேற்றிய இனாம்தாரர் குடிவாரச்சட்டம்.

இனாம்தாரர்களின் ஆதிக்கத்தைக் காப்பாற்ற இங்ஙனம் சர். வி. பாஷ்யம் ஐயங்கார் காலமுதல் T. R. வெங்கட்ராமசாஸ்திரியார் காலம்வரை பிரபல பார்ப்பனத் தலைவர்கள், கச்சை கட்டிப் புறப்படுவதைக், காரணமற்ற சம்பவமென்று யாராவது தள்ளிவிட முடியுமா? சுயஜாதி அபிமானம், வகுப்புவாத வெறி, இவைகளே இந்த நிலைமைக்குக் காரணம், என்பதை மறைக்கமுடியுமா? ஏன், இனாம்தாரர்களிடம், இந்தத் தலைவர்களுக்கு இவ்வளவு அக்கறை ஏற்படுகிறது? இதோ காரணம்.

இனாம்கள், இந்துமத சாஸ்திரப்படி, புண்ணியம் தேடுவதற்காக மன்னர்களால் தரப்பட்டவை.

சாஸ்திரப்படி, 'தானம்' வாங்கும் உரிமை யாருக்கு? பார்ப்பனருக்கே! எனவே பெரும்பாலான இனம்கள் பார்ப்பனர் பெற்ற தானங்கள்.

மற்றும் புண்யகாரியம் என்று கருதப்பட்டு,

பூந்தோட்டம்
சாவடி
சத்திரம்
வேதபாடசாலை

இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வதற்காக என்றும், பொதுவாகவே.

கோயில்
மடம்

ஆகியவற்றுக்கான காரியத்துக் காகவும், 'இனம்' நிலங்கள், வழங்கப்பட்டன.

இந்த இனம்கள், இந்து மத தத்துவத்தின்படி ஏற்பட்டது என்றபோதிலும், இந்து மன்னர்கள் மட்டுமல்ல, முஸ்லீம் மன்னர்கள், வந்துபோன மராட்டிய மன்னர்கள், பிடித்தாட்டிய பரங்கியர் அனைவருமே தந்தனர்.

இவ்வளவு இனம்களும், பார்ப்பனருக்கும், அவர்கள் கட்டிவிட்ட கதைப்படி, எதெது புண்ய கைங்கரியம் என்று எண்ணப்பட்டதோ, அந்தக் காரியத்துக்கும், தரப்பட்டனவே தவிர, கண்ணிழந்தவன், காலிழந்தவன், கதிஇழந்தவன் ஆகியோரின் பராமரிப்புக்கு, அனாதைகளின் ரட்சகத்துக்கு, அபலைகளின் கஷ்ட நிவாரணத்துக்கு என்று இப்படிப்பட்ட அவசியமான காரியத்துக்கு, இந்த மன்னர்கள் 'இனம்' வழங்கினதில்லை.



ஜெபமாலைக்குப் பயந்து இனம்கள் வழங்கினர்.

இந்து மன்னர்கள் மட்டுமல்ல, இஸ்லாமிய மார்க்க மன்னர்களுங்கூட, வழங்கினர். வடாற்காடு மாவட்டத்திலே, நட்டேரி என்பது ஓர் இனம் கிராமம்.

நஞ்சை, புஞ்சை நிலங்கள் சேர்ந்து மொத்தத்தில் 4730 ஏக்கர் உள்ளன.

இந்தக் கிராமம், 128 பிராமணர்களுக்கு, 175 வருஷங்களுக்கு முன்பு, ஆற்காட்டு நவாப்பால், முழு உரிமையுடன் ஆண்டு அனுபவித்துக்கொள்ள 'இனம்' ஆகத் தரப்பட்டது.

நவாபுக்கும், பிராமணர்களுக்கும், என்ன சம்பந்தம்? ஏன், அவர்களுக்கு 4730 ஏக்கர் பூமியை அவர் 'இனம்' தந்தார் என்பது, நமக்குத் தெரியாது. தெரிந்து என்ன பலன்? ஏனோ கொடுத்தார்! இந்து மதக்கர்த்தாக்களான பிராமணர்கள், இஸ்லாம் மதத்தவரான ஆற்காடு நவாப்பு தந்த அந்த நிலத்தை, இன்றளவு வரையில் ஆண்டு அனுபவித்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

பார்ப்பனர்களுக்கு, அவர்களின் சொந்த நன்மைக்காக என்று வழங்கப்பட்ட 'இனம்களே' இதிலே அதிகம்.

இனம்தாரர்கள் பிரச்னைபற்றி சர்க்கார் ஆராய்ந்து, முன்பு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தின்படி, பார்ப்பனர்களுக்கென்று (தானமாக) 254,473, 'இனம்கள்' தரப்பட்டுள்ளன; அதாவது, இரண்டரை இலட்சத்துக்கு மேற்பட்ட சாசனங்கள், இனம்கள், பார்ப்பனர்களுக்கு வழங்கப்பட்டவை.

கோயில், மடம், ஆகியவைகள் சம்பந்தமாக 79,196 இனம்கள் உள்ளன.

கடவுள் காரியத்துக்கு, 79,196 இனம்கள்.

பூதேவர்களின் சுகபோகத்துக்கு 254,473 இனம்கள்!

சத்திரம், சாவடி, பூந்தோட்டம், கிணறு, வேத பாடசாலை, போன்றவைகள் நடத்துவதற்கு என்று குறிப்பிட்டுத் தரப்பட்ட இனம்கள் 5600.

மற்றும் கிராமத்திலே மராமத்து, நீர்ப்பாசனம், அணை கட்டுவது, குளம் வெட்டுவது போன்ற பணிபுரிவதற்காக என்று குறிப்பிட்டுத் தரப்பட்ட இனம்கள் 6938.

கிராமக்காவல் வேலை முதலியனவற்றுக்காக 14,860.

கிராமத்து "ஊழியக்காரர்கள்" என்று பல வகை வேலைகள் செய்பவர்களுக்குத் தரப்பட்ட இனம்கள் 6360.

ஆக, இனம்தாரர்களின் தொகைதான் எவ்வளவு, யார் பார்த்தாலும் 'எனக்கு இனம் பத்திரம்



யதை இருக்கிறது, இன்ன சாசனம் இருக்கிறது' என்று கூறிக்கொண்டு கிளம்புகிறார்களே! யார் தான், இனம்தாரர், என்று சர்க்கார் ஆராய்ச்சி செய்து, எவ்வளவு 'இனம்கள்' உள்ளன என்று புள்ளிவிவரம் தொகுத்தபோது.

**367,427**

இனம்கள், வழங்கப்பட்டுள்ளன என்று முடிவு செய்தனர்.

367,427 இனம்களில்,

254,473 இனம்கள்

பார்ப்பனர்களின் சொந்தச் சுகத்துக்காகத் தரப்பட்டவை!! பாஷ்யமும் சாஸ்திரியும், ஏன் பதைக்கிறார்கள் என்பதற்கு, காரணம் ஆயிரம் காட்டுவானேன்—புள்ளி விவரம் பேசுகிறது!!

## அந்தத் துணிவு பிறக்குமா?

வரதாச்சாரி கம்பெனி! மவுண்ட்ரோடு பெருச்சாளிகள்! லஞ்சக்காசு வாங்கும் [illegible] கள்ளக்காவடிகள்! பிற்போக்குக் கும்பல்!

இந்தப் பூணாரம் பூண்ட பிரமுகர்கள், யார்? இவ்வளவு கடுமையான கண்டனங்களுக்கு ஆளானவர்கள் யார்? யாரால் தரப்படும் கண்டனச் சொற்கள் இவை—என்னதான் கட்சிமாச்சரியம் இருந்தாலும், இவ்விதமாக வெல்லாமா, தூற்றுவது—பெருச்சாளி என்றும் லஞ்சக்காசு பெறுவோர் என்றும், பிற்போக்கு வாதிகள் என்றும், கண்டிப்பதா!—என்று கொஞ்சம் கோபமாகவேகூடக் கேட்கத்தோன்றும் பலருக்கு. அந்தப் பலரிலே,

அவசர சுபாவக்காரர்கள், தெரியும்—தெரியும் எங்களுக்கு—இந்தத் திராவிடர் கழகத்தார் தான் இவ்விதம் துடுக்குத்தனமாகத் தூற்றுவார்கள்—அவர்கள் சுபாவமே அது—என்று கூறியும்விடுவர்.

ஆனால், நாம் மேலே குறிப்பிட்டுள்ள 'அர்ச்சனை'—நமது கழகத்தவர் எவரும் செய்ததல்ல—சாட்சாத் காங்கிரஸ்காரர், சாட்சாத் காங்கிரஸ்காரர் சிலரைப்பற்றிக் கூறும் கண்டனங்கள். சென்னை சட்டசபையிலே அங்கத்தினர்களாக உள்ள சில காங்கிரஸ்காரர்களை, சென்னை காங்கிரஸ் ஏடு ஒன்று, இதுபோல வர்ணித்திருக்கிறது—காரணம் காட்டி!

'தினசரியின்' ஆஸ்தான தூதனாக உள்ள 'காண்டீபம்' எனும் கிழமை இதழில் உள்ள வார்த்தைகள் இவை—யார்மீது இவ்வளவு கோபம்? காங்கிரசின் பேரால் தேர்தலில் வெற்றிபெற்று சென்னை சட்ட சபையில் மெம்பர்களாக வீற்றிருக்கும் N. S. வரதாச்சாரி, மதுரை வைத்தியநாத ஐயர் மற்றும் அவருடைய சகாக்கள் சிலர்மீதும் வீசப்படும் கண்டனச் சொற்கள் இவை.

இந்த அளவிலும் முறையிலும், இதற்குக் காட்டப்படும் காரணத்தைவிட அதிகமான காரணத்துக்காக அந்தப் பிரமுகர்களை, நாம் கண்டிக்க முடியாது—கண்டித்தால், காண்டீபமே கூட, கூவத்தில் குளித்துவிட்டு கையில் குப்பை கூளம் எடுத்துக்கொண்டு, ஓடோடி வரும், "ஆஹா! காங்கிரஸ் பிரமுகர்களையா, நீ நாக்கில் நரம்பின்றிக் கண்டிக்கிறாய்! விட்டேனா பார் உன்னை!" என்று



கூவும், கொக்கரிக்கும். இப்போதோ, காங்கிரசைச் சார்ந்த சில கண்யவான்களை, காங்கிரசை ஆதரிக்கும் ஏடெழுதும் வேறு சில கண்ணியவான்கள் கண்டிக்கும், "கர்ணாமிர்த" கானம் அடிக்கடி கேட்டவண்ணம் இருக்கிறது. ஜமீன், இனாம் ஒழிப்புக்கான திட்டமொன்று, சென்னை அமைச்சர், கனம். காளா வெங்கட ராவ் அவர்களால் கொண்டுவரப்பட்டு, பல திங்களாக, படாதபாடு பட்டுக்கொண்டு வருகிறது. கருவிலேயே இதைச் சிதைக்க விரும்பி, பெரிய பெரிய சட்ட புத்தகங்களை வீசிப் பார்த்தனர்.

'இந்து', ஆங்கில அகராதியில் காணக் கிடைக்கும் 'சப்தபலம்' பொருந்திய வார்த்தைகளை எல்லாம் தொடுத்து, பல தலையங்கங்கள் தீட்டிப் பார்த்துவிட்டது; இந்தத் திட்டத்தைத் தொலைக்க. வசந்த மண்டபத்திலும், வயல் வெளியிலும், மாநாடுகள் கூட்டி, மக்களின் நலனுக்கு இந்தத் திட்டம் கேடு செய்யும் என்று மார்தட்டிப் பார்த்தாகிவிட்டது. மடிசஞ்சிகளின் மாநாடு நடத்தி, சர்வநாசம் சம்பவிக்குமடா, சண்டாளர்களே!—என்று மிரட்டிப் பார்த்தாகிவிட்டது. இந்தக் காட்டுக் கூச்சலைக் கேட்டுக் கலங்க வேண்டாம் என்று கட்சிகளிலும் உள்ள முற்போக்குக் கொள்கையினர் கூறி, காளாவின் கரத்தையும் கருத்தையும் பலப்படுத்தினர்.

சட்டசபையிலே, ஜல்லடம்மாட்டிக்கொண்டு, போரிடத் தொடங்கினர், வரதாச்சாரியார், வைத்யநாத ஐயர், ஆகியோர்-இனாம்களைத் தொடாதே! அவை மதத்தின்பேரால் தரப்பட்ட தானங்கள்—

அவைகளைக் கெடுப்பது, மகாபாபம், மகாதோஷம் என்று கூறினர். சட்டசபையிலே, மிகப் பெரும்பாலோரின் ஆதரவு, ஜமீன் இனும் ஒழிப்புத் திட்டத்துக்குக் கிடைத்தது. உடனே, வரதாச்சாரியாரும் அவரைச் சார்ந்தவர்களும், காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலே, கச்சையை வரிந்து கட்டிக் கொண்டு, திட்டத்தைத் தகர்க்க முனைந்தனர். அங்கும் அவர்களின் முயற்சி பலிக்கவில்லை. விட்டனரா? விடுவரா? அதுதான் இல்லை—பழைய நாட்களிலே, வரம் பெற. காடேறிக் கடுந்தவம் புரிந்தவர்களின் வழி வழிகளல்லவா, பாவம், டில்லி நோக்கித் தவமிருந்தனர்—காவடி தூக்கினர்.

தவமும் பலித்ததம்மா—என்று பாடிக்களிக்கும் அளவுக்கு அவர்களுக்கு வெற்றி கிடைத்தது. காங்கிரஸ் மேலிடம் வரதாச்சாரியார் போன்றாரின் பக்கம் ஆதரவு காட்டலாயிற்று. இனும்களுக்கு காளாவின் திட்டத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டும், என்று துவக்கப்பட்ட விஷப் பிரசாரத்துக்குக் காங்கிரஸ் மேலிடம் செவி சாய்த்ததுடன், தனது பரிவுகாட்டி, சென்னை மந்திரி சபைக்கு இதுசம்பந்தமாகச் சில புதிய யோசனைகளை அனுப்பி வைத்தது. களித்தனர் கலகக்காரர்கள், காளா கலங்கினர். காளாவோ அமைச்சர்—அவருடைய திட்டத்தையோ, சட்டசபையினரில் பெரும்பான்மையினர் ஏற்கின்றனர். சென்னை மாகாணக்காங்கிரஸ் கமிட்டியோ, அதற்கு ஆதரவு அளிக்கிறது, நாடோ காளாவின் திட்டம், எதிர்பார்த்த அளவு தீவிரமானதல்ல என்றபோதிலும் ஏதோ இந்த அளவேனும் இருக்கிறதே என்று



எண்ணி ஓரளவுக்கு மகிழ்ந்து ஆதரவு தந்தது—இவ்வளவு இருந்தும், காளாவின் திட்டத்தைத் தகர்க்கமுடிகிறது சட்டசபையிலும், காங்கிரஸ் கட்சியிலும், நாட்டிலும், செல்வாக்கற்ற ஒரு சிறு கூட்டத்தால்.

பித்தாபுரம், பொப்பிலி, விஜயநகரம், எட்டையாபுரம், முதலிய இடங்களிலே, மாளிகைகளில் வீற்றிருக்கும், ஜமீன்தாரர்களால் முடியவில்லை, காளாவின் திட்டத்தைக் குலைக்க. இனும்தாரர்களின் சார்பாக, இந்தச் சிறுகும்பல் கிளம்பி ஆதரவு காட்டிற்று, வெற்றி கிட்டிற்று. சிங்கம் பங்கமடைகிறது; சிறுநரி வெற்றி பெறுகிறது. இந்தக் கேவலத்துக்கு, தன்மானத்தில் அக்கரையுள்ள ஓர் அமைச்சர் எப்படிச் சம்மதிக்க முடியும்—எங்ஙனம் சகிப்பது? சட்டசபையிலேயோ, [illegible] எதிர்ப்பு இருந்தால், அது அமைச்சரின் [illegible]றமையும் ஆண்மையையும் பரிட்சிக்கும் வீரவிளை[illegible]ல்ல—கோட்டைக்குள்ளே நடைபெறும் [illegible] கூடிக்குலவும் தோழர்களுக்குள்ளாகவே [illegible]றும் காட்டிக்கொடுக்கும் கேவலம். இதனை எங்ஙனம் சகித்துக்கொள்வது!

அமைச்சராகவும், பெருவாரியானவர்களின் ஆதரவைப் பெற்றவராகவும், நானிருந்து என்ன பயன், இதோ என் வீரம் பழிக்கப்படுகிறதே, என் எண்ணத்திலே மண் போடப்படுகிறதே, என் முகத்தில் கரி பூசுகிறார்களே, என்று அமைச்சர் உள்ளம் நோக, இவர் அமைச்சராக இருந்தால் என்ன ஆளவந்தார் கூட்டத்தவராக இருந்தால் என்ன,

கட்சியிலே இவர் கரம் வலுவாக இருந்தால் என்ன? நாடு பேராதரவு காட்டினால்மட்டுமென்ன, நம்மிடம் என்ன செய்ய முடியும்? நமது ஆற்றலுக்கு முன்பு இந்த அமைச்சர் என்ன செய்யமுடியும்? இதோ இவருடைய திட்டத்தை நாம் குலைக்கிறோம்; நமது ஆதிபத்தியத்தை அமைச்சர் அறியட்டும்; என்று கலக்காரர்கள் களிக்கவுமான நிலைமை ஏற்பட்டது.

நாட்டு மக்களோ, நாமோ ஆதரவு அளித்து விட்டோம் அமைச்சரின் திட்டத்துக்கு; அமைச்சருக்கோ, கட்சிக் கூட்டத்திலும் சட்டசபையிலும் பேராதரவு இருக்கிறது; பித்தர் சிலர் எதிர்ப்பினும் திட்டத்தை என்ன செய்துவிடமுடியும்; வெற்றிகரமாக நிறைவேறும் என்று எண்ணியிருந்தனர். மேலிடத்துத் தாக்கீது வந்தது—இனாம்தாரர்களை இரட்சிக்கும்விதமாக—அவர்களுக்குத் தரும் நஷ்டஈடுத் தொகையை அதிகப்படுத்தும் விதமாக.

அமைச்சரை, அந்தச் சிறுகூட்டம், அன்று எவ்வளவு ஆணவமும் அலட்சியமும் க்கும் கண்களுடன் பார்த்திருக்கும்! அமைச்சர், எவ்வளவு சோகமும் வெட்கமும் அடைந்திருப்பார்! மீண்டும் கட்சிக்கூட்டத்திலே, மந்திரியார் முறையிட்டார். காங்கிரஸ் மேலிடம் கூறுகிற முறையிலும் 'நஷ்டஈடு' தருவதாக இருந்தால், தாங்கமுடியாத பெரும் சுமையை இந்த மாகாணத்தின்மீது ஏற்றவேண்டி வரும்—இது ஆகாது—என்று எடுத்துரைத்தார். காங்கிரஸ்மேலிடம், குறிப்பிட்டுள்ள யோசனையின் படி நஷ்டஈடு தருவதென்றால், ஏறக்குறைய 30 கோடி ரூபாய் பாரத்தை இம்மாகாணம் சுமக்க



வேண்டி நேரிடுவதுடன், ஜமீன் இனாம் ஒழிப்புத் திட்டத்தினால், இலாபம் உண்டாவதற்குப் பதிலாக, பெரும் நஷ்டமும் வீண் தொல்லையுந்தான் விளையும், என்பதை நிபுணர்கள் கூறுகின்றனர்—அமைச்சரும் அறிவிக்கிறார். மேலிடத்துக்கு, காங்கிரஸ் கட்சிக் கூட்டம், முறையிட்டுக் கொண்டது, இந்தப் பெரும் சபையை எமது மாகாணத்தின்மீது ஏற்றாதீர்—என்று.

இதுபோதுதான் காண்டீபம் சொல்லம்புகளைத் தொடுத்தது, வரதாச்சாரி கம்பெனிமீது! ஏன் இந்தச் சிறு கூட்டம், அமைச்சரின் முகத்திலே கரிபூசும் காரியம் செய்கிறது, மேலிடத்தின் தயவைப்பெற்று, என்பதற்குக் காண்டீபம் காட்டும் காரணம், கண்யத்திலே நம்பிக்கையும் மதிப்பும் கொண்டுள்ள எவரையும் தலைகுனியச் செய்யும் விதத்தது. கேளுங்கள், அந்தக் காரணத்தை! 'வெள்ளிக் காசுகள் தண்ணீர் பட்டபாடாய் நடமாடுவதுதான் காரணம்.' இனாம் ஒழிப்புத் திட்டத்தால் பாதிக்கப் படுபவர்களிடமிருந்து வெள்ளிக் காசுகளைப் பெற்றுக்கொண்டு—அதாவது கைக்கூலி பெற்றுக்கொண்டு—காங்கிரஸ் மேலிடத்துக்குத் தூது சென்றும் தூபமிட்டும், இந்தக் கூட்டம், காளாவின் திட்டத்தைக் கெடுக்கிறது—என்று நாமல்ல—காங்கிரசை ஆதரிக்கும் ஏடு, பச்சையாகவே எழுதுகிறது.

இனாம் ஒழிப்புத் திட்டத்தை உருக்குலைக்கும் முயற்சியில் துவக்கமுதல் ஈடுபட்ட காங்கிரஸ் M. L. A. க்கள், யாரார் என்பதை நாடறியும்—அவர்களின் யோக்யதையைக் காண்டீபம் நாட்டுக்கு அறிவிக்கிறது—ஏதோ கொள்கை காரணமாக, கருத்துக் கோளாறு காரணமாக அவர்கள் இதுபோல் நடந்து கொள்கிறார்கள் என்று எண்ணிவிடவேண்டாம், எல்லாம் 'பணநாதன்' செய்கிற காரியந்தான் என்று கூறுகிறது. இந்த பகிரங்கக்

குற்றச்சாட்டைக் கேட்டுக்கொண்டு, துளியும் துடிக்காமல் பதைக்காமல் இருக்க முடிகிறது, அந்தக் கண்ணியமிக்கவர்களால்! வெள்ளிக்காசு தண்ணீர் பட்ட பாடாய்ப் படுகிறது!—எங்கு?—புண்ய பூமியில்!—எப்போது?—புனிதர் ஆட்சியில்!! வெள்ளிக் காசுக்காக, சொந்தக் கட்சியின் திட்டத்தைக் குலைக்கவும், ஏழை எளியோருக்குத் துரோகம் இழைக்கவும், சிலர் துணிகிறார்கள். அவர்களே நாட்டு மக்களுக்குப் பிரதிநிதிகள்—M.L.A.க்கள்!! எப்படி இருக்கிறது இலட்சணம்!!

பொதுமக்களுக்கு நன்றாக ஒரு உண்மை தெரியும்; இனாம்தாரர்களில் பெரும்பாலானவர்கள் பார்ப்பனர் என்பதை அறிவர். வெள்ளிக் காசுகளைப் பெற்றுக்கொண்டு, மேலிடத்தாரிடம் சென்று சாடிகூறி, இனாம்தாரர்களுக்குச் சலுகையும் சாதகமும் தேடியவர்கள் பார்ப்பனப் பிரமுகர்கள், வைத்யநாத ஐயர், வரதாச்சாரியார் போன்றவர்களே என்பதையும் மக்கள் அறிவர். இந்தக் கூட்டுச் சதி நாட்டின் அமைச்சரைக் கலக்கமுறச் செய்யுமளவுக்கு வெற்றி பெற்றிருப்பதை அறிஞர், அறிந்தவர்கள், நாட்டின் நிலைமைபற்றி என்ன கூறுவர்—எவ்வளவு மனம் குமுறுவர்!

குறை கூறுகிறார்கள்—அனாவசியமாகப் பார்ப்பனரைக் கண்டிக்கிறார்கள் இந்த அழிவு வேலைக்காரர்கள், என்று நமது கழகத்தவரைக் கண்டித்துவிட்டு மேதைப் பட்டமும், சமரச வாதி என்ற சிறப்புரையும் பெறும் அன்பர்களைக் கேட்கிறோம், நாட்டிலே, நமது நாட்களில், நடைபெறும், இந்தக் கூட்டுச் சதியைப்பற்றி என்ன எண்ணுகிறீர்கள்! எப்படிச் சகித்துக் கொள்கிறீர்கள்! பார்ப்பனரால், எத்தகைய நிலையிலும், ஆட்சியின்போதும், தங்கள் நலனைப் பாதுகாத்துக்கொள்ளவும், தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டவும் முடியும் என்று கூறும்போதெல்லாம், செத்த பாம்பை அடிக்கும்



'சித்த ஸ்வாதீன' மற்றவர்கள் என்று எம்மை ஏளனம் செய்தீர்களே, இப்போது என்ன சொல்கிறீர்கள்! என்ன ஆனார் அமைச்சர்! சட்ட சபையிலே உள்ள மெஜாரிடி பலம் எதற்கு உதவிற்று? காங்கிரஸ் கட்சிக்குள் கிடைத்துள்ள பேராதரவு தான் எதற்குப் பயன்பட்டது! இதோ மேலிடத்துக்குத் தூபமிட்டு, திட்டத்தை உருக்குலைக்க முடிகிறதே—என்ன சொல்கிறீர்கள் இந்த நிலைமைக்கு?—என்று கேட்கிறோம்.

இவ்வளவும் காண்டீபம் கூறுவதுபோல வெள்ளிக் காசுகளுக்காக இப்படிப்பட்டவர்கள் இன்னமும், சட்டசபையிலே, 'ஜாம் ஜாமென' வீற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள் — மகிமை வாய்ந்த காங்கிரஸ் சபையின் மாணிக்கங்களாக. காண்டீபம் எழுதியிருப்பது முழுவதையுமே வெளியிடுகிறோம், கருத்தூன்றிப் படித்துப் பாருங்கள். "ஜமீந்தாரி, இனாம்தாரி எதிர்ப்பு மசோதா பழையபடியும் ரகளையைக் கிளப்பிவிட்டிருக்கிறது. மத்திய பார்லிமெண்டரி போர்டார் யோசனையை சென்னை சர்க்கார் கேட்க மறுக்கிறார்களென்றும், ரெவின்யூ மந்திரி காளா வெங்கட்டராவ் தன்னிஷ்டப்படி நடக்கிறாரென்றும் வரதாசாரி கம்பெனி கூப்பாடு போகிறது. இதை ஒட்டிப் பல பத்திரிகைகள் தலையங்கங்கள் தீட்டிவிட்டன. இனாம்தாரி ஒழிய வேண்டுமென இப்பத்திரிகைகள் எழுதியிருக்கின்றனவோ என்று யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. சென்னை சர்க்கார் இப்படி நடக்கப் போச்சா என்றுதான் எழுதியிருக்கின்றன. இனாம்தாரி ஒழிப்புக்கு இவர்கள் ஆதரவு காட்டுவார்களென்று எதிர் பார்ப்பதே தப்பு. திருடன் திருட்டுத்தொழிலைக் கண்டிப்பான் என்று எதிர் பார்ப்பது எப்படியோ, அப்படி தான் மவுன்ட்ரோடு பெருச்சாளிகள் இனாம் ஒழிப்புக்கு ஆதரவு காட்டுமென எதிர் பார்ப்பதாகும்.

மத்திய பார்லிமெண்டரி போர்டாருக்கு சென்னை சர்க்காரின் இந்த மசோதாவில் பெரும் தொல்லை ஏற்பட்டிருக்குமென அறிகிறோம். இந்தத் தொல்லையை அவர்கள் நினைத்திருந்தால் போக்கியிருக்கலாம். அதாவது இனாம்தாரி ஒழிப்பில் பாதிக்கப்படுகிறவர்களிடமிருந்து லஞ்சக் காசு வாங்கி டில்லிக்கு ஓடிவரும் சில அன்னக் காவடிகளுக்கு அவர்கள் பேட்டியும், வாதத்தை எடுத்துக் கூற சந்தர்ப்பமும் அளிக்காதிருந்தால் இந்தத் தொல்லையே ஏற்பட்டிருக்க முடியாது. மத்திய பார்லிமெண்ட் போர்டார் இதைச் செய்யத் தவறிவிட்டார்கள். அதன் விளைவுதான் இந்த ரகளைகளுக்கெல்லாம் காரணம். இந்த பிரஸ்தாப மசோதாவுக்கு சென்னை சட்டசபை காங்கிரஸ் கட்சி ஏற்கனவே அங்கீகாரமளித்திருந்தும், சில மெம்பர்கள் இதற்கு நேர்மாறாக நடந்துவருகிறார்கள். மசோதாவை மட்டந்தட்ட அவர்கள் செய்துவரும் ஜாலவித்தைகளுக்கு கணக்கு வழக்கே இல்லை. சட்டசபைக் கட்சிக் கூட்டத்தில் பேசுவதோடு, வெளியேயும் அவர்கள் தகராறை மூட்டிவருகிறார்கள். இவர்கள் நோக்கமெல்லாம் மசோதாவை சாக அடிப்பதுதான். இந்த நோக்கம் நிறைவேறாது என்பது நிச்சயம். இது அந்த பிற்போக்குக் கும்பலுக்கே தெரியும். இருந்தும் ஏன் இப்படி வரட்டுக் கத்து கத்துகிறார்கள் என்று கேட்கலாம். அதற்கு வெள்ளிக் காசுகள் தண்ணீர்பட்ட பாடாய் நடமாடுவதுதான் காரணம். இந்த வெள்ளிக் காசு புழக்கம் சற்று நின்றுவிட்டால், இந்த கும்பல் வாலைச் சுருட்டிக்கொண்டு உட்கார்ந்து விடும். அதுவரை இந்த பிற்போக்காளர் கதறத்தான் செய்வார்கள். தாராளமாகக் கதறுங்கள் என்றுதான் இவர்களுக்கு சொல்ல வேண்டும்."



நிலைமையைக் கண்டு கோபம் கொண்டு, பெருச்சாளிகள், இலஞ்சம் பெறுவோர், அன்னக்காவடிகள், என்று வரதாச்சாரி கம்பெனிமீது வசை பாடுகிறது காண்டீபம். வசைமொழி அவர்களை என்ன செய்து விடும்! நிலைமையை எப்படி அதனால் திருத்த முடியும்? காங்கிரஸ் மேலிடத்திலிருந்து இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு தாக்கீது வந்து விட்டது—ஆகஸ்ட்டு பத்தாம் தேதிக்கு மேல் சென்னைக் காங்கிரஸ் கட்சி கூடி, மறுபடியும் தாக்கீதைப் பற்றி யோசிக்கப் போகிறது.

இந்த நிலைமை சரியா? முறையா? மேலிடம் என்று ஓர் அமைப்பு இருப்பதும் அதற்கு இங்குள்ள ஆளவந்தார்கள் அடக்கி நடப்பதும், ஏன்—எந்த விதமான அரசியல் நீதியின்படி இது நடைபெறுகிறது? இந்த மாகாணத்தின் பெருவாரியான மக்களின் தீர்ப்புக்கு மாறாக நடந்துகொள்ளும்படி அதே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை வற்புறுத்துவது, சரியா?—இவைகளல்லவா காண்டீபம் கவனித்திருக்க வேண்டிய பிரச்னைகள்

மேலிடம் என்றோர் அமைப்பும், முடிவான தீர்ப்புக் கூறும் அதிகாரம் அந்த அமைப்புக்கே உண்டு என்ற நிலையும் இருக்கும் வரை வெள்ளிக் காசு பெற்றுக்கொண்டோ தங்க வளையங்களைப் பெற்றுக்கொண்டே சென்று சாடி கூறி, சதி புரிய ஏதாவதோர் கம்பெனி, அவ்வப்போது கிளம்பியபடிதான் இருக்கும். மாகாண சுயாட்சி—மக்களாட்சி என்பது கேலிக் கூத்தாக்கப்படுகிறது—கேட்பார் காணோம்.

அமைச்சர்களின் திட்டங்களை ஆகாவழிகள் குலைக்க முடுகிறது மேலிடத்தின் தயவினால் இதற்குப் பெயர் ஜனநாயகமாகும்? ஏன், இந்த நிலைமையை அனுமதிக்கிறார்கள்? மேலிடம், அரசி

யல் நாணயத்தை விரும்பியிருந்தால் மக்களாட்சியில் அவர்களுக்கு மதிப்பு இருக்குமானால், ஒரு சிறு கூட்டம் சாடி கூறியதைக் கவனிக்கலாமா! போ! போ! போய் உன் மாகாண மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்—என்னிடம் முறையிட்டுப் பயன் இல்லை—நான் மாகாண சுயாட்சியிலே தலையிட முடியாது, என்றல்லவா, மேலிடத்துத் தலைவர்கள் கூறியிருக்க வேண்டும் கூறினரா அது போல் தொல்லை ஏற்பட்டதற்குக் காரணமே, "இலஞ்சக் காசு வாங்கி டில்லிக்கு ஓடிவரும் சில அன்னக் காவடிகளுக்கு அவர்கள் பேட்டியும், வாதத்தை எடுத்துக்கூற சந்தர்ப்பமும் அளித்ததால்"—என்பதைக் காண்டீபம் கூறுகிறது—ஏன் மேலிடம், அன்னக்காவடிகளின் பேச்சுக்கு அவ்வளவு மதிப்பளிக்கிறது, அதிலும் அமைச்சரின் பேச்சைவிட மேலானதாக, ஏன் அவர்களின் பேச்சை மதிக்கிறது?

'அன்னக் காவடிகள்,' 'இலஞ்சக் காசுக்காக டில்லிக்கு ஓடுகிறார்கள்—சரி மேலிடத்தார் ஏன், இப்படிப் பட்டவர்களின் பேச்சை மதிக்கிறார்கள்-என்ன காரணம்! வெள்ளிக் காசுகள், அன்னக் காவடிகளிடமே தங்கி விட்டனவா, இல்லை, அவர்கள் தபால்காரராகி, சேர்க்க வேண்டிய இடத்திலே கொண்டுபோய், வெள்ளிக் காசுகளைச் சேர்த்து விட்டனரா-மர்மம் என்ன! காண்டீபம் இதனை விளக்கக் கடமைப் பட்டிருக்கிறது—முடியுமானால் போகட்டும், மேலிடத்தார்தான், இலஞ்சக் காசு பெறுகிற அன்னக் காவடிகளின் பேச்சில், எப்படியோ இலயித்து, மக்களின் தீர்ப்பை மதிக்க மறுத்து, அமைச்சரின் திட்டத்தைக் குலைக்கத் துணிந்து விட்டனரே, அவர்களின் போக்குச் சரியல்ல என்பதும் காண்டீபத்துக்குத் தெரிகிறதே, தெரிந்த பிறகாவது, ஒரு வார்த்தை மேலிடத்தைக்



கண்டித்து எழுதினதுண்டா = எழுதத் துணியுமா? மவுண்ட் ரோட் பெருச்சாளிகள்-எவ்வளவு தாராளமாகவும் தைரியமாகவும் வீசிவிட்டது, வசை மொழியை!—இந்தத் தைரியத்திலே ஆயிரத்திலோர் பாகம், அந்த மேலிடத்தைக் கண்டிக்கக் கிளம்புமா!

சென்னை மாகாண சர்க்கார் சென்னை மாகாண மக்களால் அமைக்கப்பட்டிருக்கிறது—அந்தச் சர்க்காரின் திட்டம் இந்த ஜமீன் இனம் ஒழிப்பு என்பது—இதிலே தயவு செய்து, தாங்கள் தலையிட வேண்டாம். எங்கள் உரிமையைப் பறிக்க வேண்டாம்—என்று தீர்மானம் நிறைவேற்ற, காண்டீபத்துக்கு அல்ல, அதுபாவம் கொஞ்சம் கார சாரமான எழுத்துக்களை எழுதிடும் ஏடு—அமைச்சர்கள், ஆற்றல் மிக்க காங்கிரஸ் தலைவர்கள், சட்ட சபையினரால் முடியுமா என்று கேட்கிறோம். நிறைவேற்றினால், அமைச்சர் நிலைக்கே ஆபத்து என்பது அவர்களுக்குத் தெரியும்!

இப்போதே, வரதாச்சாரி கம்பெனி, கேட்கிறதே, அமைச்சரையும் அவருடைய ஆதரவாளர்களையும் பார்த்து—காங்கிரஸ் மேலிடத்தின் கட்டளையை ஏற்றுற்றுக்கொள்ளப் போகிறீரா இல்லையா! அந்தக் கட்டளையை மீறி நடந்தால் என்ன நேரிடுமென்பதை அறிவீரா?—என்று கேட்டு, மிரட்டுகிறதே!! அமைச்சரும் பிறரும் கூட, "மேலிடமோ வேறிடமோ நாம் நமது மனச்சாட்சியின்படிதான் நடந்து கொள்வோம்—எமது உரிமையில் தலையிடும் எவருக்கும் இனி இடமளியோம்" என்று கூறுகின்றனர்.

மேலிடத்துக்கு, நாங்கள் முறையிட்டுக்கொள்வோம்—விளக்கம் கூறுகிறோம்—என்றும், முடிவில் மேலிடம் கூறுகிறபடிதான் நடந்து கொள்வோம் என்றுந்தான் கூறுகின்றனர்.

இந்த நடுக்கம், அந்த அன்னக் காவடிகள் பெறும் இலஞ்சக் காசைவிடக் கேவலம் என்பதை, இவர்கள் அறிய மறுக்கிறார்களே, மேலிடம் என்றோர் அமைப்பு இருக்கு—அதனிடம் ஒரு கூட்டம் சாடி சொல்லப்போகும், மற்றோர் கூட்டம் விளக்க முரைக்கும், இடையே மாகாண சுயாட்சி இருக்கும். எவ்வளவு கேவலமான நிலை—கேலிக் கூத்து.

இந்தக் கேவலமான நிலையிலிருந்து இவர்களை விடுவிக்கச் செய்யும் முயற்சிதானே, நாம் திராவிட நாடு திராவிடருக்கு என்பது.

இந்த மாகாணத்து மக்களுக்கு, மேலிடத்தின் தாக்கீதுதான் முடிவான சட்டம் என்றால், மாகாண சர்க்கார் ஒரு பெரிய ஜில்லாபோர்டுதானே—நிலையில்—தரத்தில் — திறத்தில்! இதுவா மாகாண சுயாட்சி! காண்டீபம், வரதாச்சாரி கம்பெனி மீது சரம் தொடுத்து என்ன பயன்? இலக்குத் தெரியாது, வீரம் காட்டப்படுகிறது. நிலைமை தெரியாதவர்கள் நீதி பேசுகிறார்கள்! உரிமையைப் பறி கொடுக்கத் துணிந்தவர்கள், உள்ளூர்க் காரர்களின் கண்முன், வீரதீரர்களாக வேஷமிட்டுத் திரிகிறார்கள்! வீண்வேலை! வீம்புக்குச் செய்யும் காரியம்!

மக்களின் உரிமையையும், ஏழை எளியோரின் நலனையும், சட்டசபையின் மானத்தையும், அமைச்சரின் அந்தஸ்தையும், கட்சியின் கண்ணியத்தையும், காப்பாற்ற வேண்டும் என்பதிலே கடுகளவாவது அக்கரையும், ரோஷமான உணர்ச்சியும் இருக்குமானால், காண்டீபமாகட்டும் பாசுபதாஸ்திரமாகட்டும். [illegible] ஏந்தியுள்ள அரசியல் அர்ஜுனர்களாகட்டும், டில்லியை நோக்கி, சற்றே நிறுத்தும் பிள்ளாய்! இந்தச் சர்வாதிகாரத்தை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று கூறத் துணிவு கொள்ள வேண்டும், முடியுமா? நாம், சந்தேகிக்கிறோம்.

---